ORIENTAL MANUSCRIPTS LIBRARY
NOV 1915

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கஉ.] ஆனந்த௵ வைகாசி௴ [பகுதி-எ.
Vol. XII. May—June. 1914. No. 7.

திருவிளையாடற்புராணம் 64-வதுபடல ஆராய்ச்சி.

பரஞ்சோதிமுனிவர் மொழிபெயர்த்தருளிய திருவிளையாடற் புராணம் 64-வதுபடலத்தில், திருஞானசம்பந்தசுவாமிகள் திருப்புறம்பயத்தின்கண் ஒரு வணிகமாதின் துயரொழிக்கும்வண்ணம் அரவாலிறந்தவணிகனுக்கு ஆருயிர்வழங்கி; அவ்விருவரையும் மணம்புணரும்படிசெய்தருளினர் என்று கூறப்பட்டுள்ளது ஆனால், திருஞானசம்பந்தசுவாமிகள் திருமருகலில் அங்ஙனம் செய்தருளியதாகத் திருத்தொண்டர்புராணத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்விருசரிதங்களையும் சென்ற 19-ம் நூற்றாண்டில் ஆராய்ச்சிசெய்த சில சுதேசவிற்பன்னர்கள், திருவிளையாடற்புராணமுடையார்கூறுவது சரித்திர ஆராய்ச்சியிற் சிறிதும் நம்பத்தக்க உண்மையாகமாட்டாதென்றும், திருத்தொண்டர்புராணத்திற்சொல்லப்பட்டிருப்பதே உண்மையாகவிருக்கவேண்டுமென்றும், மேற்கூறிய இருபுராணங்களிலும் சொல்லப்படும் சரித்திரங்களிரண்டும் ஒரேசரித்திரமாகத்தானிருக்கவேண்டுமென்றும் தத்தமக்குத் தோன்றியவாறு கூறிப்போந்தனர். இதனை, ஆராயப்புகுமுன்னர் அவ்விருபுராணங்களிலுங் கூறப்படும் சரித்திரங்களைச் சுருக்கமாய் அடியில்வரைகின்றேன்.

திருத்தொண்டர் புராணத்தில், (திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்புராணத்தில்) சொல்லப்பட்டிருக்கும் சரித்திரமாவது:— வைப்பூரின்கண் ஏழுபுதல்விகளையுடைய தாமன் என்னும் ஒருவணிகன், தனதுமருகனுக்கு மூத்தகுமாரத்தியை விவாகஞ்செய்துகொடுப்பதாய்வாக்களித்துப் பிறகு வேறொருவனிடம் பெருந்தனம்பெற்று,

அவனுக்குக் கொடுத்து, பின்னரும் அப்படியே மற்றைய ஐந்துபுத்திரிகளையும்அயலார்க்கே மணஞ்செய்விக்க, இதனையுணர்ந்த ஏழாவது குமாரத்தி தனது தந்தையாரதுவஞ்சச்செயலைக்கண்டு, பொருது, மனம்வருந்தி, பெற்றோர்கட்குத்தெரியாமல் அவனுடன்புறப்பட்டு வெளியேசெல்லும்போது, வழியில் ஓரிரவில் திருமருகல் திருக்கோயிற்குப்புறத்தில் ஒருமடத்தின்கண் நித்திரைசெய்யுங்கால் அவ்வணிகன் அரவத்தினால் தீண்டப்பட் டிறக்க, அதனைக்கண்ட அக்கன்னியானவள் அவனைச் சர்ப்பந்தீண்டியுந் தான் தீண்டாளாய் அவனருகேவிழ்ந்து கதறிவருந்த அக்காலத்து அவண் எழுந்தருளிய ஆளுடையபிள்ளையார் நிகழ்ந்ததையறிந்து, அவள்துயரொழிப்பத் திருமருகற்பெருமானைச்சிந்தித்துச் "சடையாயெனுமால்" என்னும் அருட்பதிகமோதி அவ்வணிகனை யுயிர்பெற்றெழச்செய்ததுடன், அவ் விருவரையும் மணம்புணரச்செய்து, அவர்கட்கு விடைகொடுத்தனுப்பினரென்பதேயாம்.

இனி, திருவிளையாடற்புராணத்திற்கூறப்படுஞ் சரித்திரமாவது:—கடற்புறத்துள்ள ஒருபட்டினத்திற் செல்வமிகுந்த ஒருவணிகன் தான் தவங்கிடந்துபெற்ற ஓரேபுதல்வியை மதுரையம்பதியில் முதன்மணமுடித்துவாழ்ந்துகொண்டிருந்த தனது மருகற்கு மணஞ்செய்விக்கும்படி சுற்றத்தாருக்கு அறிவித்து, ஊழ்வினைவலியால் மனைவியுந் தானும் உயிர்துறக்க, அதனையறிந்தமருகன், மிக்க துயரத்துடன் அப்பட்டினத்தையடைந்து, மாமன்மனையிற் சின்னாளிருந்து, தனது மாமன்புதல்வியை மதுரைக்குக்கொண்டுபோய், ஆங்கு உறவினர்முன்னிலையில் மணந்துகொள்வோமென்று, அக்கன்னியையும் அழைத்துக்கொண்டு, அவ்விடத்து விடைபெற்று, மதுரையைநோக்கிச் செல்லுங்கால், வழியில் ஓரிரவில் திருப்புறம்பயம் என்னும் முதூரின்கண் தங்கி, ஆண்டுச் சிவபெருமான் திருக்கோயிற்கருகில் வன்னிமரத்தடியிற் போனகமமைத்துண்டு, கோயில் வாயிற்படியின்மீது தலைவைத்துறங்கும்போது அவ் வணிகன் ஓரரவால் தீண்டப்பட் டிறக்க,அதனையுணர்ந்த அவ்வணிகமாதும் மற்றையோரும் பக்கத்திருந்து வருந்தி யலறுகையில், அவ்வூர்மடாலயத்தெழுந்தருளியிருந்த ஆளுடையபிள்ளையார் இந் நிகழ்ச்சியையறிந்து, திருக்கோயிலையடைந்து, சிவபெருமானைத் துதித்துப் பதிகமோதி,

அவனை உயிர்பெற்றெழச்செய்து, பின்னர் அவ்விருவரையும் அவ்விடத்திலேயே திருமணஞ்செய்துகொண்டுசெல்லவேண்டுமென்று திருவாய்மலர்ந்தருளலும், இதனைக்கேட்ட வணிகன் தனது உறவினர்களும் மன்றற்குரியசான்றுகளுமின்றி மணமுடித்தற் குடன்படானாய்நிற்க, கருணையங்கடலாங் காழிவள்ளலார், "உன்மன்றற்கு ஈண்டுக்காணப்படும் வன்னியும் கிணறும் இலிங்கமும்சான்றுகளாகு" மென் றுரைத்துத் திருமணம்புணரும்படிகூறலும், அவ்விருவரும் அப்பெருமானாணையைக் கடத்தற்கஞ்சினோர்களாய் அவ்விடத்து மணஞ்செய்துகொண்டு, மதுரையையடைந்து வாழ்ந்துவரும் நாளில், அவ்வணிகன்மூத்தமனைவியின்புத்திரர்களும் இளையாள்மைந்தனும் சண்டையிட்டுக்கொள்ள, அதனால் மூத்தாள் கோபமுண்டு இளையாளைநோக்கி "முறைமையான ஜாதி, குலம், ஊர், பேர்முதலியன வின்றி எனதுகணவனைக்காதலித்துப் பின்றொடர்ந்துவந்த காமக்கிழத்தியாகிய நீ என்மணாளனை மணந்ததற்குச் சான்றுகள் உளவாயின், சொல்லுக!" என்றுகூறலும், இதனைக்கேட்ட இளையாள் நாணமுற்று, "என்நாயகன் அரவாலிறந்தனான்று ஆருயிரீந்தருளிய ஆளுடையபிள்ளையாரருளினால் ஆண் டருகேயிருந்த வன்னியும் கிணறும் இலிங்கமும் என்மன்றற்குச் சான்றுகளாயுள" என்றுகூறலும், இதனைக்கேட்ட மூத்தாள் நகைத்து "நின்மன்றற்கேற்றசான்றுகளுரைத்தனை! நல்லது! அவை யீண்டுவருமாகில் அதுவும் மெய்யே!" என்றுரைக்க, இளையாள் மிக்கதுயரத்துடன் சிவபெருமானைநினைந்து அற்றைநாளிரவு உண்டியு முறக்கமுமொழிந்து பிற்றைநாளிற் பொற்றாமரையில்மூழ்கி, புனிதவெண்ணீறணிந்து ஆலவாயுறையிறைவனைப் பன்முறைவணங்கியெழுந்து "அடியார்க்குநல்லாய்! நச்சினார்க்கினியாய்! ஆலமுண்டவருட்பெருங்கடலே! எனதுநாயகன் என்னை மணந்தஞான்று ஆண்டுச்சான்றுகளாயிருந்தநீயும் வன்னியும் கிணறும் இவண் எழுந்தருளி என்மாற்றாள் நகைப்பையும் ஐயத்தையும் ஒழித்து எளியேனைக்காத்தருளாயேல், யான், எனதாருயிர் துறப்பேன்" என்று வருந்திக்கூறலும், பெருங்கருணைத்தடங்கடலாகிய இறைவனதருளால் அம்மூன்றும் அவ்வாலயத்து வடகீழ்த்திசையில்வந்துதோன்ற, அவற்றை இளையாள் தன்மாற்றாட்குக் காட்டி, அவளுடன்சேர்ந்து வாழ்ந்துவந்தனளென்பதேயாம்.

திருத்தொண்டர்புராணத்திற்கூறப்படும் சரித்திரம் உண்மையில்நடைபெற்றதேயென்று நல்லறிஞர்பலரும் அங்கீகரித்துள்ளாராதலின், யான், ஈண்டு ஆராய்ச்சிக் கெடுத்துக்கொண்டது திருவிளையாடற்புராணத்துச்சொல்லப்படும் சரித்திரமே. ஐம்பெருங்காப்பியங்களி லொன்ருயதும், களவியற்பொருள்கண்ட கணக்காயனுர் மகனுர்நக்கீரனுர்முதலிய தொல்லுரையாசிரியர்களால் எடுத்துக்காட்டப்படும் பிரமாணநூல்களி லொன்ருயதும், சேரமுனியாகிய இளங்கோவடிகளா லியற்றப்பெற்றதுமாகிய சிலப்பதிகாரத்தில் அவ்வணிகமாது வன்னிமுதலியவற்றைத் தன்மன்றற்குச் சான்றுகளாகநிருத்திக்காட்டியவிஷயம் மிகச்சுருக்கமாய்க் கூறப்படுகின்றது [1]. இனி, திருப்புறம்பயபுராணத்தைநோக்குங்கால், இச்சரித்திரம் தெளிவாகவும் விரிவாகவும் ஆருவதுசருக்கத்திற் சொல்லப்படுகின்றது [2]. அன்றியும், சைவசமயாசாரியராகிய திருஞானசம்பந்தசுவாமிகள், தாம், திருப்புறம்பயத்தில் திருவாய்மலர்ந்தருளிய தேவாரப்பதிகத்தில் இச் சரித்திரத்தைச் (ஒரு பாகத்தைமாத்திரம்) சுருக்கமாய்க் குறித்திருக்கின்றனர் [3]. இதுகாறுங்கூறியவாற்ருல் இஃது உண்மையாக நடந்துள்ளதொரு தனிச்சரித்திரமென்பது நன்குபுலப்படும். இதனுல், திருத்தொண்டர்புராணத்திலும், திருவிளையாடற்புராணத்திலும் சொல்லப்படும் சரித்திரங்கள் இரண்டும் வெவ்வேறென்பது தெற்றெனவிளங்கும். இவ்வுண்மையுணர்ந்தன்ருே 800 வருடங்கட்குமுன்னிருந்தவராகிய பெரும்பற்றப்புலியூர்நம்பியார் தமது பழைய திருவிளையாடற்புராணத்தில் மேற்கூறிய இரண்டுசரித்திரங்களும் வெவ்வேறென்றுகூறிப்போந்தனர் [4].

---

1. "வன்னிமரமுமடைப்பளியுஞ்சான்ருக
முன்னிறுத்திக்காட்டியமொய்குழலாள்"—சிலப்பதிகாரம் 21-வது வஞ்சினமாலை 5, 6.

2. இப்புராணம் இன்னும் அச்சிட்டு வெளிவரவில்லை.

3. "விரிந்தனைகுவிந்தனைவிழுங்குயிருமிழ்ந்தனை"—திருஞானசம்பந்தசுவாமிகள் திருப்புறம்பயப்பதிகம் 3-வது பாசுரம்.

4. மருத்தயில்பாப்புக்காப்புவள்ளலைமனத்துவைத்துத்
தருக்கமார்காழிவேந்தர்சடையெனும்யாப்பெடுத்து
விரைத்திருமருகறன்னில்வெவ்விடந்தீர்த்தன்றித்
திருப்புறம்பயத்தலத்திற்றீர்த்தனர்திருக்கண்சாத்தி.

வேம்பத்தூரார் திருவிளையாடற்புராணம் 62-வதுபடலம் 39வதுசெய்யுள்.

இனி, இவ் விருசரித்திரங்கட்கும் பற்பலவேறுபாடுகளுண்மை யால், இவற்றைக் காய்த லுவத்த லகற்றி ஒப்பநாடி ஒருங்கேயாரா யும் ஆன்றோர்பலர்க்கும் இவை வெவ்வேறென்பது நன்குவிளங்கு மென்க.

திருப்புறம்பயபுராணம் 6-வதுசருக்கத்திலும் திருவிளையாடற் புராணம் 64 வதுபடலத்திலும் கூறப்படுஞ் சரித்திரங்களிரண்டும் ஒன்றேயாயினும் சிற்சிலவிடங்களில் ஒன்றற்கொன்று முரணுகின்ற மையால், அவற்றின் வன்மை மென்மைகளை ஈண்டு ஆராய்கின்றேன்.

1. திருவிளையாடற்புராணத்தில் அரவுகடித்திறந்தவணிக னுக்கு ஆருயிரளித்துத் திருமணஞ்செய்வித்தவர் திருஞானசம்பந்த சுவாமிகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது[5]. ஆனால், திருப்புறம் பயபுராணத்தில் அங்ஙனம் செய்தருளியவர் புறம்பயத்துறை இறை வனேயென்று கூறப்பட்டிருக்கிறது[6]. இவற்றுள் எது வன்மை யுடைத்தென்பதை ஆராயவேண்டும்.

திருஞானசம்பந்தசுவாமிகள்காலத்தினராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் பாண்டிநாட்டுத் திருப்புத்தூர்த்தேவாரப்பதிகத்தில் மூன்றுஞ்சங்கத்து[7] நிகழ்ந்த ஒருநிகழ்ச்சியைக்குறித்திருக்கின்ற னர்[8]. இதனாற் சுவாமிகள் இருவரும் மூன்றுஞ்சங்ககாலத்திற்குப்

5. பரஞ்சோதியார்திருவிளையாடல் 64வதுபடலம் 24 முதல் 32 வரை.

6. கருணையாலிரங்கிக்கரும்படுசொல்லிகண்ணுதற்கடவுளைநோக்கித்
தருணமானவையாள்கணவனையிழந்து தவிப்பதுகண்டுளஞ்சகியேன்
வருணமார்வணிகனுருயிர்மீளவழங்கிடவேண்டுமென்றிரப்ப
முரணிலாவிடங்கள்தீர்ப்பவன்போலமுதல்வனுமாங்குவந்தடைந்தான்.

—திருப்புறம்பயபுராணம் 6 வதுசருக்கம் 35 வதுசெய்யுள்.

உருத்தவெவ்விடத்தைநீக்கலும்வணிகனுறங்கினன்போல்விழித்தெழுந்தான்
பெருத்தபூண்முலையாண்மங்கலநாணும்பெற்றனள்பெரியமாலிமையோர்
கரத்தனென்றிரப்பக்கடுவிடமுண்டுகமலமான்முதலியமடவார்
திருத்துமங்கலநாணீந்தவனிந்தச்சில்விடந்தீர்ப்பது மரிதோ. ஷை ஷை 36.

கசிந்தவெம்பிரான்றன்னுருவெளிப்படக்காட்டி
வசந்தகுத்தன் மாமகடனைவணிகனைமகிழ்ந்தே
விசைந்தநல்லியாழ்க்காந்தருவத்தினர்விவாக
மிசைந்துகாதலித்திருவருமணத்திரென்றிசைத்தான். ஷை ஷை 39

7. கடைச்சங்கம்

8. "நற்பாட்டுப்புலவனாய்ச்சங்கமேறிநற்கனகக்கிழிதருமிக்கருளினோன் காண்" திருநாவுக்கரசுசுவாமிகள் - திருப்புத்தூர்ப்பதிகம் 3-ம் செய்யுள்.

பின்னரே தமிழ்நாட்டில் விளங்கியவர்களென்பதுபோதரும். அன்றியும், திருஞானசம்பந்தசுவாமிகள் கி. பி. ஏழாம்நூற்றூண்டின்முற்பகுதியில்விளங்கியவரென்று காலஞ்சென்ற திருவனந்தபுரம் ப்ரொபஸர் சுந்தரம்பிள்ளையவர்கள் நன்காராய்ந்து தமது "திருஞானசம்பந்தர்காலம்" என்னும் ஆங்கிலநூலிற் கூறியிருக்கின்றனர்[9]. மூன்றுஞ்சங்கம் கி. பி. இரண்டாம் நூற்றூண்டிலும் அதற்குமுந்திய காலங்களிலும் நின்றுநிலவியதாகலின், திருஞானசம்பந்தசுவாமிகள் மூன்றுஞ்சங்ககாலத்திற்குப் பன்னூற்றூண்டுகட்குப் பின்னர் இருந்தவரென்பது நன்குவிளங்குகின்றது. இன்னும் தமிழ்மாது செழிப்புற்று மகோன்னதநிலைமையிலிருந்த மூன்றுஞ்சங்ககாலத்தில், தனித்தமிழ்ச்செய்யுளாகிய ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நான்கனுள், பெரும்பான்மை ஆசிரியப்பாவும் வெண்பாவும் சிறுபான்மை எஞ்சியவிரண்டுபாக்களும் நடைபெற்றுவந்தனவேயன்றி, நம் சுவாமிகள்காலத்துப் பெருவழக்காகக்காணப்படும் விருத்தப்பாக்கள் நடைபெற்றதில்லையென்பதும் மேற்கூறியதை வலியுடைத்தாமாறுசெய்தலைக் காண்க. இதுகாறுங்கூறியவாற்றூற் சுவாமிகள் மூன்றுஞ்சங்கத்திற்குப்பிந்தியவரென்பது நன்கறியக்கிடக்கின்றது. மூன்றுஞ்சங்ககாலத்தில் (அதாவது கி. பி. இரண்டாம்நூற்றூண்டின்முற்பகுதியில்) இயற்றப்பெற்றநூலாகிய சிலப்பதிகாரத்தில் மேற்கூறியசரிதம் மிகச்சுருக்கமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றமையால் இந்நூல் இயற்றப்பட்டகாலத்திற்குமுன்னரே இச்சரிதம் நடைபெற்றிருக்கவேண்டுமென்பது தெற்றெனவிளங்குகின்றது. இதனாற் சிலப்பதிகாரமியற்றப்பெற்ற காலத்திற்குப்(அதாவது மூன்றுஞ்சங்ககாலத்திற்குப்) பன்னூற்றூண்டுகட்குப்பின்னரிருந்த திருஞானசம்பந்தசுவாமிகள் இச்சரித்திரத்திற் சொல்லப்படும் வணிகனுக்கு ஆருயிரளித்தருளினர் என்று திருவிளையாடற்புராணத்துச் சொல்லப்பட்டிருப்பது சிறிதும் பொருந்தவில்லையென்க[10].

---

9. Cf. Tamilian Antiquary No. 3.

10. பழையதிருவிளையாடலியற்றியருளிய நம்பியார்கூற்றும் பொருந்தவில்லையென்பது ஈண்டுக் கவனிக்கத்தக்கது.

அன்றியும், திருஞானசம்பந்தசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருப்புறம்பயத் தேவாரப்பதிகத்திற்காணப்படும் "விழுங்குயிருமிழ்ந்தனை" என்னும் வாக்கியத்தினால் அரவாலிறந்தவணிகனுக்குப் புறம்பயத்துறை இறைவன் இன்னுயிரீந்தருளினாரென்பது சுவாமிகட்கும் உடன்பாடாத லுணர்க. இனி, மிகப்பழையகாலத்தில், புறம்பயத்துறை சிவபெருமான் சனகாதிநால்வர்க்கு அறம்பயனுரைத்தருளியவிஷயத்தை "நால்வர்க் கறம்பயனுரைத்தனை புறம்பயமமர்ந்தோய்[11];" என்று முதலாவதுபாசுரத்திற் சுவாமிகள் இறந்தகாலத்திற் கூறியருளியதுபோல், மூன்றாவதுபாசுரத்திலும் "விழுங்குயிருமிழ்ந்தனை[12]" என்று இறந்தகாலத்திற்கூறியிருத்தலே, புறம்பயத்துறை யிறைவன் அரவாலிறந்தவணிகனுக்கு ஆருயிரீந்தருளியது சுவாமிகள்காலத்திற்குப் பன்னூற்றாண்டுகட்குமுன்னரே யென்பதற்குத்தக்கசான்றாகும். இதுகாறுங்கூறியவாற்றால், திருப்புறம்பயபுராணத்திற்சொல்லப்பட்டிருப்பதே வன்மையுடைத்தாதலறிக.

2. திருவிளையாடற்புராணமுடையார் வன்னி, கிணறு, இலிங்கமாகிய மூன்றுமே அவ் வணிகமாதின் மன்றற்குரியசான்றுகள் எனக் கூறியிருக்கின்றனர்[13]. திருப்புறம்பயபுராணமுடையார் மடைப்பள்ளியுஞ்சேர்த்து நான்கென்கின்றனர்[14].

---

11. மறம்பயமலைந்தவர்மதிற்பரிசறுத்தனை
நிறம்பசுமைசெம்மையொடிசைந்தனதுநீர்மைத்
திறம்பயனுறும்பொருள்தெரிந்துணருநால்வர்க்
கறம்பயனுரைத்தனைபுறம்பயமமர்ந்தோய்.

திருஞானசம்பந்தர்-திருப்புறம்பயப்பதிகம்-1-வது பாசுரம்.

ஈண்டு "புறம்பயமதனிலறம்பலவருளியும்" என்னும் ஸ்ரீமத்-மாணிக்கவாசகசுவாமிகள் அருமைத்திருவாக்கைநோக்குக.

12. விரிந்தனைகுவிந்தனைவிழுங்குயிருமிழ்ந்தனை
திரிந்தனைகுருந்தொசிபெருந்தகையுநீயும்
பிரிந்தனைபுணர்ந்தனைபிணம்புகுமயானம்
புரிந்தனைமகிழ்ந்தனைபுறம்பயமமர்ந்தோய்.

திருஞானசம்பந்தர்-திருப்புறம்பயப்பதிகம்-3-வது பாசுரம்.

13. திருவிளையாடற்புராணம் 64 வது படலம் 31.

14. அன்னதன்மையின்மதுரையிற்போந்துநின்னருளாற்
பின்னர்நன்மணம்புரிகுதுமென்றதும்பெரியோன்
வன்னிவன்னிசேர்மடைப்பளிமலிபுனற்கூவ
மின்னநம்வடிவிவையெலாங்கரியெனவெண்ணி.

திருப்புறம்பயபுராணம் 6 வதுசருக்கம் 41.

புதுமணந்தளையாழினோர்தன்மையிற்புணர்வீர்
முதியபுன்மொழிகிளையினோர்மொழிந்திடுநாளின்
மதுரையம்பதியிவையுடன்கூடயாம்வந்தே
வுதவிச்சாக்கியங்குணர்த்துவதுண்மையென்றுரைத்தார். ஷை ஷை 42.

பண்டைத்தமிழ்நூலாகிய சிலப்பதிகாரத்தில் தன்மன்றற்குச் சான்ருக மடைப்பள்ளியும் அவ்வணிகமாதாற் காட்டப்பட்டதென்று கூறப்பட்டிருக்கிறது[15]. இதனுல், திருப்புறம்பயபுராணமுடையார் கூற்று வன்மையுடைத்தென்பது நன்கறியக்கிடக்கின்றது. ஆனுற் சிலப்பதிகாரமியற்றியருளிய ஆசிரியர் இளங்கோவடிகள் அம்மாது, வன்னியும் மடைப்பள்ளியும் தன்மன்றற்குச்சான்ருகக்காட்டினுளென்றுரைத்து எஞ்சியவிரண்டையுங் கூருதுவிடுத்தமைக்குக்காரணம் தற்காலத்துப் புலப்படவில்லை.

3. வணிகமாதுபிறந்தநகரம் கடற்புறத்துள்ள ஒருபட்டினம் என்று திருவிளையாடற்புராணத்திற் சொல்லப்பட்டிருக்கிறது[16]. திருப்புறம்பயபுராணத்திலோ காவிரிப்பூம்பட்டினமென்று கூறப்பட்டிருக்கிறது[17].

இதற்கு ஒருசாரார்கூறும் சமாதானமாவது: தற்காலத்துப் 'பட்டினம்' என்பது அநேகபட்டினங்களிருப்பச் சென்னையைமாத்திரங் குறிப்பதுபோல், பண்டைக்காலத்திற் 'பட்டின'மென்பது காவிரிப்பூம்பட்டினத்தையே குறித்ததாகலின் மேற்கூறிய இருபுராணங்களும் இவ்விஷயத்தில் முரணவில்லையென்பதேயாம். இனி இவர்கள்கூற்றை யங்கீகரித்துக்கொண்டு, வேறுநூல்களில் இதைப்பற்றி ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதாவென்பதை யாராயுங்காற் சிலப்பதிகாரமும் (அம்மங்கைபிறந்தநகரம்) காவிரிப்பூம்பட்டினமென்றுகூறுவதாக வெளியாகின்றது[18]. இதனுல் அம்மங்கைபிறந்தநகரம் காவிரிப்பூம்பட்டினமென்பது நன்குபுலனுகின்றது.

---

15. வஞ்சினமாலை—5, 6.

16. திருவிளையாடற்புராணம் 64வதுபடலம். 2

17. பற்பலவைகல்கழிந்தபின்னெவரும்பழிச்சிடும்பூம்புகார்வசியன்
பொற்புளநாகமங்கையர்தாழப்பூதலமடந்தையர்பரவ
வற்புதவானத்தரம்பையர்நாணவழகொருவடிவெடுத்தனைய
கற்பகம்படர்ந்தகாமர்பூங்கொடியிற்கன்னிகையயரிதினிற்பயந்தான்.
ஷை ஷை 19.

18. சிலப்பதிகாரம் வஞ்சினமாலை 5 முதல் 36 வரை. (அடிகள்)

இதுகாறும் என்சிற்றறிவுக்கெட்டியவரை யான்செய்த ஆராய்ச்சியால், திருவிளையாடற்புராணத்திலும் திருத்தொண்டர்புராணத்திலும் கூறப்படுஞ்சரிதங்க ளிரண்டும் வெவ்வேறென்பதும், திருஞானசம்பந்தசுவாமிகள் அரவாலிறந்தவணிகனுக்கு ஆருயிரளித்தருளினரென்று திருவிளையாடற்புராணங்கூறுவது ஆராய்ச்சியிற் சிறிதும்பொருந்தவில்லையென்பதும், புறம்பயத்துறையிறைவனே அங்ஙனஞ்செய்தருளினரென்று திருப்புறம்பயபுராணங்கூறுவதே வன்மையுடைத்தென்பதும், முன்றற்குக்காட்டப்பட்டசான்றுகள் மடைப்பள்ளியுடன் நான்கென்பதும், அவ்வணிகமாதுபிறந்தநகரம் காவிரிப்பூம்பட்டினமென்பதும் விளங்கிநிற்றல்காண்க.

T. V. சதாசிவப்பண்டாரத்தார்,
திருப்புறம்பயம்.

தேக ஆராய்ச்சி.

——:(o):——

செந்தமிழ் (தொகுதி கஉ பகுதி ரு) கஅ௬-ம் பக்கத்தொடர்ச்சி.

குளிர்ஜ்வரம்.

இவ்வியாதி, காலரா பிளேக் முதலிய அதிதுரிதத்தில் ப்ராணஹானிவருத்தக்கூடிய கடினரோகங்களைப்போற் பயங்கரமானதல்லவென்று நமது அநுபவத்திற் சாதாரணமாய்த்தோற்றப்படினும் இந்த ஜ்வரத்தால் அநேகஜனவர்க்கங்கள் பலஹீனப்பட்டு இகசுகங்களையநுபவிக்கப்ராப்தியின்றித் தமதினத்தோர்க்கும் பிறர்க்கும் ப்ரயோஜனப்படாமலிருப்பதுந்தவிர, மனோவ்யாகுலராய்ப் பரலோகக்ஞானமுயற்சியுமற்று, இவ்வியாதியைத் தம்தேஹத்திலவளர்த்து வருவதால் இதர ஜனசமூகங்களையும் பீடிக்கச்செய்து அவர்களுக்கும் துன்பம்விளைவித்து முடிவில் தாமும் அவர்களும் அகாலமரணத்திற் காஸ்பதமாகிறார்கள். அந்தோ! பிளேக் காலராமுதலிய கடினரோகங்களில்மாளுவதிலும் இவ்வியாதியால்முடிவுபெறும்ஜனத்தொகை மிகவும்பெரிதே.

இவ்வியாதியைப்பரவச்செய்யும் பரமாணுப்ரமாணமானஜீவியின் ஜீவசரித்திரத்தை மிகச்சுருக்கமாய் இங்கு வரைந்துவைப்போம்.

இந்த ஜீவியின் உற்பத்திக்கும் வாழ்க்கைக்கும் மனிதன்றேகம் மாத்திரமல்ல, வேறொருபிராணியின்றேஹமும் அவசியமானது. இந்தப்ராணி ஒருவிதகோசுகு என்று வைத்யசாஸ்தரவித்வான்களிற் சிலராற் கண்டுபிடித்துவெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

ஆகவே, குளிர்ஜ்வரம்வ்யாபிப்பதற்கு மூன்றுவிதப்ராணிகள் அவசியமாம். (1) இவ்வியாதியாற்பீடிக்கப்பட்ட மனுஷ்யதேகம், (2) ஒருவிதகொசுகு, (3) பரமாணுப்ரமாணமான குளிர்ஜ்வரஜீவி. இம்மூன்றி லொன்றுகுறைவுபடுமாகில் இவ்வியாதி யுண்டாகா தென்பது திண்ணம்.

("வித்து முன்னதோ? மரம் முன்னதோ?" என்னும் வினவுக்கு விடையளிக்கக் கடவுளொருவரே காரணபூதராகையால் உற்பத்தியின்முதல்ஸ்தானம்வினவாவிடில் இங்குரைப்பது பொருந்தும்.)

குளிர்ஜ்வரத்தாற் கொஞ்சகாலமாகவருந்துவோனிரக்தத்தில் இவ் வியாதியை வியாபிக்கச் செய்யும் ஜீவிகள் அநேகமாய்வளர்ச்சியடைந்து இரக்தத்திற்பரவியிருப்பது பிரத்யக்ஷமாகக்காணவேண்டுமேல் அவனது ஒருவிரன்முனையில் ஒருசிறியஊசியாற்குத்தியெடுக்கப்பட்ட ஒருதுளியிரத்தத்தைச் சூக்ஷ்மதரிசினியந்திரத்தாற் பரிசோதிக்கிற் காணலாம். இப்பரிசோதனையால் அவற்றின் ஆபாலவிருத்த அவஸ்தைகளெல்லாம் கரதலாமலகம்போற்காணப்படும். இவற்றில் வியாபகாவஸ்தைபூர்ணித்திருக்கும்ஜீவிகள் நிறைந்துள்ளகாலத்தில் ஒருகொசுகு தனது க்ஷுத்பாதைநிமித்தம் அவ்வியாதிஸ்தனைக் கடித்து, அவனிரக்தத்தையும் அவ்விரக்தத்துடன் அந்தஜீவிகளையும் உட்கொள்ளுகின்றது. இவை அக்கொசுகினிரைப்பைசேர்ந்து ஜீர்ணீகரிக்கப்பெறாமல் போஜனரஸங்களுடன்சேர்ந்து கொசுகின் ஹிர்தயஞ்சென்று பிறகு அவயவபோஷணார்த்தம்செல்லும் இரக்தத்துடன்கலந்து அக்கொசுகின்றேஹமெங்கும்வியாபிக்கின்றன.

இந்தஜீவிகள் மனுஷ்யரக்தத்துடன்போந்த அவஸ்தையிலேயே கொசுகினுடலில்வியாபிக்கின் அவை வியாதியைப்பரவச்செய்யுங் குணமுடையவையாயிரா. கொசுகின்றேஹத்திற்பிரவேசித்தவுடன்

அவை உருமாற்றமுடையனவாய்ப் பலவாய்ப்பெருகி வியாதியை மற்றொருமனிததேகத்திற்பரவச்செய்யும் விசேஷசக்தியுடையவை யாய்வளர்ந்துவிடுகின்றன. இவற்றிற்சில கொசுகின்வாயூரலிலும் நிறைந்துள. இவ்வவஸ்தையுடையகொசுகு தேகாரோக்யமுடைய வேறொருமனிதனைக்கடிக்கிற் கடித்தவிடத்தில் அதன் வாயூரலின் வழியாய் அநேகஜீவிகள் அவனது இரக்தத்திற்பிரவேசிக்கின்றன. பிரவேசித்தவுடன் ஒன்று இரண்டு—இரண்டு நான்கு—நான்கு பதினாறுகப்பெருகிவளர்ந்து இந்தப் புதுமனிதனிரக்தத்தைத் தங்கள் வாஸஸ்தானமாக்கி அதன் இரஸபாகங்களைப்பருகி யுணவுகொண்டு அவனைப் பலஹீனப்படுத்தி அவன்வாழ்நாட்களைப் பலவிதத்தில் நிஷ்ப்ரயோசனப்படுத்துகின்றன.

கொசுகின்வாயூரல்வழியாய் இந்தஜ்வரஜீவிகள் இரக்தத்திற் பிரவேசித்து அதன்சாராம்சமான சிவப்புஅணுக்களைத்தாக்கி அவற்றின் இரஸத்தைப்பருகிவளர்ந்தவுடன் இரட்டிப்பிரட்டிப்பாகப் பெருகித் தாம்வசிக்கும் இரக்தஅணுவிற் சாராம்ஸமில்லாமற்போவ தாற் சாராம்ஸமுள்ள இதரஅணுக்களைத்தாக்குகின்றன. இப்படி இரக்தத்தின் சிவப்புஅணுக்களைத் தாக்கும்பொழுதே குளிரும் ஜ்வரமும் உண்டாகின்றன. அவற்றிற்ப்ரவேசித்தவுடன் ஜ்வரம் நின்றுவிடுகிறது. மறுபடியும் 24 மணிக்குள்ளோ 48 அல்லது 72 மணிக்குள்ளோ குளிரும் ஜ்வரமும் ஆரம்பிக்கின்றன. அதாவது சிலஜீவிகள் 24 மணிக்குள் மறுபடியும் தாம்வசிக்கும் இரத்தஅணுக் களினின்றும் புதியஅணுக்களிற்ப்ரவேசிக்கின்றன. வேறுசில 48 மணிக்குள் தாம் பிரவேசித்த அணுவின்சாராம்ஸங்களைமுடித்து விட்டு அவ்விடத்திற்பெருகிவளர்ந்து போஷணநிமித்தம் வேறு சிவப்புஅணுக்களைத் தாக்குகின்றன. மற்றவை 72 மணிக்குள் இதரஅணுக்களைத் தாக்குகின்றன. இப்படி அடிக்கடி தாம் ஜீர்ணம் செய்துகொண்ட இரக்தஅணுக்களினின்று பெருக்கமுடையதாய் ஆரோக்யமான இதரஅணுக்களைத் தாக்கித்தாக்கி நாசஞ்செய்கின்றன வன்றோ.

இந்தஜீவிகள் சாதாரணமாக மூன்றுஜாதிபேதமுடையவையாய் நமதுபரதகண்டத்திற் காணப்படுகின்றன. (1) 24 மணிக்குட் பெருகுபவை—ஒருநாள்விட்டொருநாள் குளிர்ஜ்வரம் உண்டாக்குபவை.

(2) 48 மணிக்குட்பெருகுபவை—மூன்றுமுறைஜ்வரம் உண்டாக்குபவை. (3) 72 மணிக்குட்பெருகுபவை—நான்காமுறைஜ்வரமுண்டாக்குபவை—என்பவைகளே.

இம்மூன்றுவிதஜ்வரங்களும், ஆரம்பத்திற் கடினமாயும் நாட்செல்லநாட்செல்ல வலுக்குன்றியும் பிறகு குறித்தமணிநேரங்களிலல்லாமல் வேறுசமயங்களிலுண்டாகியும்வரக் காண்கிறோம். தவிர இம்மூன்றுவித ஜ்வரஜீவிகளும் ஒரேமனிததேகத்திற்பிரவேசித்து இரக்தபரிசோதனையாலன்றி ஜ்வரத்தால் இன்னின்னவையென்று பகுத்தறியமுடியாவண்ணம் ஆக்ரமிப்பதையும் காண்கிறோம். சில மனிதர்கள் கொஞ்சநாள் ஜ்வரத்தாற்பீடிக்கப்பட்டுப் பிறகு சிலநாட்களில் ஜ்வரமேயில்லாமலிருந்து தேகம் பலஹீனப்படும்பொழுதோ சீதளபதார்த்தம் சாப்பிடுவதாலோ குளிர்காற்றிற்சஞ்சரிக்கநேரிடிலோ மறுபடியும் ஜ்வரத்தாற்பீடிக்கப்படுகிறார்கள். இப்படி ஆரம்பிப்பதற்குப் புதிய ஜ்வரஜீவிகள் இரக்தத்திற்பிரவேசிக்கவேண்டுமென்றில்லை. முன்பிரவேசித்தஜீவிகளின் உற்பத்தி வாழ்வு அழிவு என்னும் அவஸ்தைகளாலேயே உண்டாகலாம்.

இதற்குள், தேகம்வெளுத்து இரத்தந்தூஷித்து ஈரல் மண்ணீரல் நுரையீரல்முதலியஅவயவங்கள்பெருத்துப் பலஹீனப்பட்டுக் கடவுளால் அவைகட்குநியமிக்கப்பட்டிருக்குந்தொழில்களைச் செய்யமுடியாமற்போகின்றன.

ஈரல் (Liver) பெருக்கின், நாவுக்குருசியின்மை, அஜீர்ணம், மலக்கழிவு கஷ்டமாகவோ அல்லது அசாதாரணமாகவோ உண்டாவது, யாதொருமுயற்சிக்கும் தான்செய்துவருந்தொழிலுக்கும் உற்சாகமின்மை முதலியகெடுதிகளையுண்டாக்கும். வலதுபக்கவாரியெலும்புகட்குக்கீழே கையால் மெதுவாக அழுத்திப்பரிசோதிக்கின், ஈரல்பெருத்திருக்கிற ஸ்பரிசிக்கலாம்.

மண்ணீரல் (Spleen) பெருக்கின், இது இறைப்பையைத்தாக்குவதால் வழக்கப்படியுட்கொள்ளும்போஜனமருந்த வயிற்றுவலியும் சயனத்திலும் சஞ்சரிப்பதிலும் இடப்பாகம்நோயும் பலஹீனமும் பெருமூச்சுவாங்கமுடியாமைமுதலியகெடுதிகளும் உளவாகும்.

மண்ணீரல்பெருக்கின் இடதுபக்கவாரியெலும்புகட்குக்கீழ் முன் போற் கையழுத்திப்பரிசோதிக்கிற் ஸ்பரிசிக்கலாம். இதற்கே பெரும் பாலும் "ஜ்வரக்கட்டி" என்றநாமம் வழங்குகின்றது.

நுரையீரல் (Lungs) பெருக்கின் இரேசககஷ்டம் இருமல் சயனசுகமின்மை இரத்தஒட்டங்குன்றுவது சஞ்சாரசக்தியின்மை புத்திக்கூர்மைக்குறைவுமுதலிய அநேககெடுதிகள் நேரிடும். இந்த அவயவம் மார்பினகத்து மார்பெலும்புக்கூட்டி லடைபட்டிருப்பதால் ஸ்பரிசசாத்தியமானதன்று.

(தொடரும்.)

V. S. அருணாசலம்பிள்ளை,
S. A. S.

யசோதரகாவிய ஆராய்ச்சி.

———:o:———

(௨௨௯-ஆம்பக்கத் தொடர்ச்சி.)

மூன்றுவதுசருக்கம்.

யசோதரனும் அவனதுதாயாகிய சந்திரமதியும், 'சித்திரத்தி லுருவுஞ் சிதைத்தலாகாது' என்னும் அறவுரையைமறந்து மாக் கோழியைக்கொலைபுரிந்தபாவத்தானும் இறக்குந்தருணத்திற் பற் றறுது மனத்திலெழுந்ததீயநினைவுகளானும், ஒழியாத்துயர்களுக்கு உறைவிடமாகிய பல இழிபிறப்பெய்தி, அப்பிறப்புக்கள்தோறும் கொல்லப்பட்டுழன்றனர். அவர், தாம் மாக்கோழியைக் கொலைபுரிந் தது தீச்செய்கையெனவுணர்ந்து அநுதாபப்பட்டு, தவவழிச்சென்று நல்லறம்புரியுமாறு துணிவுகொண்டிருந்தாராதலின், அவரது இழி பிறப்புக்கள் அம்மட்டோடுநின்றன.

யசோதரன் விந்தமலைச்சாரலில் ஒருமயிலின்வயிற்றில் முட்டை வடிவுற்றுவளர்ந்தனன். அப்பொழுது வேடனொருவன் அவ்வழி யே வேட்டையாடிக்கொண்டுவந்து மயிலினை அம்பினலெய்துகொன் றனன். அம்பின்வாயிலாய்வெளிப்பட்ட முட்டையை அவன்

கையிலெடுத்துத் தன்மனைவியின்கையிற்கொடுத்து "நீ இதனைக் கோழிமுட்டைகளுடன்வைத்துவளர்க்க" எனவே, அவளும் அதனை யேற்று அவ்வாறேநன்குவளர்த்துவந்தனள். அம்முட்டை நாளடைவிற் பெரியதோ ரழகிய நல்லமயிலாகவளர்ந்தது. தாயாகிய சந்திரமதியோ அப்பட்டினத்துப் புறச்சேரியிற் பெண்ணாயாகப் பிறந்து வளர்ந்தனள். மயிலையும் நாயையும் அவைகளுக்குரியவர்கள் யசோமதியரசனுக்குக் காணிக்கையாகக்கொணர்ந்துகொடுத்துப் பரிசு பெற்றுப்போந்தனர். ஒருநாள் அரண்மனைமாளிகையிற் பாவியாகிய அமிருதமதி அஷ்டபங்கனுடன் இன்புற்றிருக்கக்கண்ட மயில், அதனைக்காணப்பொறாது சரேலெனப்பாய்ந்து, அத்தீயன்றுகண்களைக் குத்திக்கிளறிவிட்டது. அதுகண்ட அமிருதமதி அடங்காக்கோபங் கொண்டு பக்கத்திருந்த கற்றிரள்களையெடுத்து அதன்தலையிலெறிந்தனள். மயில் தலைநொறுங்கிப் படுகாயப்பட்டுக் கீழேவீழ்ந்து, எழுந்தோடவலியற்றுத் தவித்துத் துடித்தது. இதனிடையில் முற்பிறப்பிற் சந்திரமதியாகவிருந்த நாய் தற்செயலாக அவ்வழியே ஓடிவந்து, மயிலை வாயினுற்கௌவியெடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தது. நாயின்வாயிற்பட்ட மயில் உடல்பதறித் துன்புற்று உயிர்துறந்தது. அதுகண்ட யசோமதியரசன் தன்னருமைமயில் இறந்ததற்குக்காரணம் நாய்தானெனநினைந்து, பக்கத்திருந்த சொக்கட்டான்பலகையினுல் நாயைக் கொன்றுதொலைத்தனன். முற்பிறப்பில் மன்னனும் அவன்றாயுமாக வாழ்ந்திருந்த மயிலும் நாயும் இவ்வாறு நமன்வாயிற்பட்டன. அந்தோ பாவம்! வெல்வதற்கரிது வினையின்பயன்.

மயிலும் நாயும் இறந்துவிட்டபின்னர், விந்தமலைக்காடுகளிற் காட்டுமிருகங்களுக்குநடுவில் முறையே முட்பன்றியும் கரும்பாம்புமாகப்பிறந்தன. ஒருநாள் முட்பன்றி கொடும்பசியினுல்வருந்தி, இரைதேடிச் சுற்றிச்சுழன்று அல்லாடித்திரிகையில், முற்பிறப்பில் தனக்குப்பகையாகவிருந்த கரும்பாம்பை எதிரிலேகண்டு, அதனைக் கொன்றுதின்றுவிட்டது. சிறிதுநேரஞ்சென்றபின்னர், அக்காட்டிலிருந்த ஒருசிறுத்தைப்புலி பசிமேலிட்டு அவ்வழியேவந்து, ஆங்கு இரையெடுத்து அயர்ந்துகிடந்த முட்பன்றியைப் பிடித்துக் கிழித்துத் தனக் கிரையாக்கிக்கொண்டது.

இங்ஙன மிருமுறைபிறந்திறந்த யசோதரனும் சந்திரமதியும் மீண்டும், உஞ்சயனீநகரையொட்டி யோடும் சிருப்பிரையாற்றினுள், நீர்வாழும்பிராணிகளுக்குநடுவில் முறையே லோஹிதமென்னு மழகிய வொருவகைமீனும் முதலையுமாகப் பிறந்தனர். முற்பிறப்பில் முட்பன்றியாகவிருந்து தன்னைக் கொன்றுதின்றதாகிய லோஹித மீனை இப்பிறப்பில்முதலை விரட்டிக்கொண்டு தொடர்ந்துசென்றது. முதலைக்குத்தப்பிப்பிழைக்குமாறு, லோஹிதமீன் தன்னாலியன்ற மட்டில் விரைவாய் ஆற்றில் நீந்திநீந்தி முற்சென்றுகொண்டிருந்தது. இச்சமயத்தில் அரண்மனைத்தாதிகளுட் கூனியாமொருத்தி அவ்வாற் றில் நீராடவந்திறங்கவே, முதலை மீனைவிடுத்துக் கூனியைப்பிடித் திழுத்துக்கொண்டு ஆற்றினடித்தளஞ்சேர்ந்தது. இச்செய்தியைச் செவியுற்ற யசோமதியரையன் வலைஞர்களைவிளித்து, எவ்வாற்றானும் முதலையைப்பிடித்துக்கொல்லுமாறு கட்டளையிட்டனன். வலைஞர் வலைவீசி முதலையைப்பிடித்துக் கண்டதுண்டமாக்கிச் சுட்டெரித்துக் கொன்றனர். கொலையுண்டமுதலை அந்நகரத்துப் பறைச்சேரியிற் பெண்ணுடாகப்பிறந்துவளர்ந்தது. சிலநாட்சென்றபின்னர் வலைஞர் மீண்டும் வலைவீச, வலையிற்பட்ட அழகிய லோஹிதமீனை அரசன் காணுமாறு அவர்கள் அவனெதிரில்வைத்தனர். ஆங்கு அதனைக் கண்ணுற்ற கருணைக்கடல்களாகிய அந்தணர்சிலர், அரசனைநோக்கி, "வேந்தே! இது நின்குலத்தாருக்குச் சிராத்தஞ்செய்வதற்கு உரியது" எனக் கூறினர். அவரதுகூற்றுக்கு உடன்பட்ட அரசனும் அம்மீனின் அவயவமொன்றினை யரிந்தெடுத்துக் கறியாக்கிச் சிராத்தஞ்செய்தனன். அதனை வயிறாரத்தின்று களிப்படைந்தபிராஹ்மணர்கள், "யசோமதியரையன் இப்பூவுலகினை நெடுநாளாண்டு சிறப்புற்றுவாழ்க; அவனதுதந்தையாகிய யசோதரன் பிறப்பிறப்பில்லாது எற்றைக்கும் சொர்க்கத்தில்வாழ்க" என வாழ்த்தினர். சிராத்தத்திற்காக அரிந்தெடுத்ததுபோக எஞ்சியிருந்தபகுதியில் உயிர் நீங்காது அதுகாறும் துன்புற்று அல்லாடிக்கொண்டிருந்த லோஹித மீன், வேதியரோதிய ஆசியைக்கேட்கவே, "யசோதரனாகியயான் போனவுயிரும் போகாவுயிருமாக இங்குக்கிடந்து தவித்துக்கொண்டிருக்கிறேன்; இவர்கள் எனதுடலினொருபகுதியைத் தம்வயிற்றிலாக்கிக்கொண்டு என்னைச் சொர்க்கத்திலிருத்துதல் நன்றுநன்று"

என நகைத்து மனமுளைந்து உயிரொழிந்தது. உயிர்மாய்ந்தபின் அந்நகரத்துப்புறச்சேரியில் முற்கூறிய பெண்ணாட்டின்வயிற்றிற் கடாவாகப்பிறந்துவளர்ந்தது.

ஒருநாள் அவ்வாட்டுக்கடா காமவெறிகொண்டு தன்றாய்மீதேறி அதனைமிதிக்கவே, மற்றொருகடா கண்டு பொறாமைகொண்டு, கடுஞ் சினத்தாற் கண்களில் இரத்தஞ்சுரந்து ஓடிவந்து, கூரியகொம்பு களால்முட்டித்தள்ளி வயிற்றைக்குத்திக்துளைத்துக் கொன்றுவிட் டது. பின்னர், இறந்துவிட்டகடா தாயின்வயிற்றிற்சேர்ந்திருந்த தாதுவிற்சார்ந்து மீண்டும் அத்தாய்வயிற்றிலேயேவளர்ந்துகொண் டிருந்தது. யசோமதியரசன் ஒருநாள் வேட்டைக்குச்சென்று, அன்று ஒருபிராணியுங்கிட்டாது மனங்குலைந்து திரும்பிவந்து, புலையர்சேரி யில் அப்பொழுது முட்டுச்சினையாகவிருந்த அப்பெண்ணாட்டைப் பிடித்துவரச்செய்து, அதனைக் கைவாளினால்வெட்டித் துண்டமிட்ட னன். வாளின்வாயிலாய்வெளிப்பட்டகுட்டியை ஆங்கு நீளநின்ற புலையனதுகையிற்கொடுத்து, அதனைவளர்க்கும்படி கட்டளையிட் டனன். புலையனும் அரசனது கட்டளைப்படி யதனைக் கண்ணுக்குக் கண்ணாய் நன்குவளர்த்தனன். பின்னொருகால் யசோமதியரசன் சண்டிகாதேவியைவேண்டிக்கொண்டு வேட்டைக்குச்சென்றனன்; அன்று வேட்டையாடிப் பல்லுயிர்களைக் கொன்றுகொணர்ந்தனன்; அதுகொண்டுமகிழ்வுற்றுச் சண்டிகாதேவிக்கு ஒரு எருமைப்பலி கொடுத்தனன். அதனிறைச்சியில் அவாக்கொண்ட அந்தணர்சிலர் அம்மாம்சம் சிராத்தத்திற்குச் சிறந்ததெனவும், ஆயினும் வெயிலிற் கிடந்து காய்ந்தமையின், காகங்களால்தீண்டப்பட்டதுகொண்டு சிராத் தத்திற்காகாததெனவும் கூறினர். பின்னும், அதனை நல்லசாதியா டொன்று முகர்ந்துவிடுமாயின் அது முன்போலவே தூயதாமென நாரதர்முதலாம்முனிவர்கள் அறநூல்களிற் சொல்லியிருக்கின்றன ரெனவும் மொழிந்தனர். அரசன் அவர்கள்சொன்னதைச்செவி யேற்று, புலையர்சேரியில் வளர்க்குமாறு தான்விட்டிருந்தகடாவை வருவித்து அதனைக்கொண்டு அவ்விறைச்சியைமுகர்வித்துச் சமை யல்செய்து சிராத்தஞ்செய்தனன். பிராஹ்மணர்கள் அமுதுண்டு அதனுடன் அவ்விறைச்சியையும்புசித்து "யசோதரனும் அவனது தாயும் இறப்பறுந்துறக்கத்தில் என்ஞான்றும்வாழ்க" என்று நன்றி

கூறினர். அவர்மொழிந்த ஆசியைக்கேட்டு, தான் முற்பிறப்பில் யசோதரனாகவிருந்ததனை யோர்ந்துணர்ந்த ஆட்டுக்கடா, ஆங்குள்ள ஒவ்வொரு இடத்தினையும் ஒவ்வொருமனிதரையும் நன்குக அறிந்து கொண்டதுமன்றி, தன்னையும் தன் றாயையும் அமிருதமதி நஞ்சிட்டுக்கொன்றவிடத்தைக்காணவே, அவ்விடத்து அவளைக்காணாது, "பாவியாகிய அமிருதமதி தன் களவொழுக்கத்தில் ஈடுபட்டு ஜாரனும் அஷ்டபங்கனுடன் எவ்விடத்துமருவியிருக்கின்றனளோ, அல்லது எங்குச்சென்றனளோ, யான் அறிகிலேன். மேலும், என்னையொழிந்த எவரும் ஈண்டு இனிதுவாழ்ந்திருக்க, யான்மட்டும் எனதுதீவினையால் இங்ஙனம் துன்புற்றுத் தவிக்கநேர்ந்ததே" யெனக் கலங்கலுற்றது; "இங்ஙனம் இடையறாது என்னை வாட்டிவதைக்கும் சொல்லற்கரிய எண்ணிலாப் பெருந்துன்பங்களை யான் அநுபவித்துப் பக்கத்து நிற்க, இதுசங்கதி யாதுமறியாத இவ் வென்மகன், மாம்ஸப்க்ஷகர்களாம் இப் பிராஹ்மணர்களின்வாய்மொழியில் மயங்கி, அவர்வாயிலாய்ச் சொர்க்கத்தில் என்னை வாழவைக்கின்றனனே, இதென்ன பேதைமை!" எனநினைந்து மனம்வாடிற்று.

இதனடுவில், அரசனால் முன்னமேவெட்டுண்ட பெண்ணாடு, கலிங்கநாட்டில் எருமைக்கடாவாகப்பிறந்தது.. அது நாளடைவிற் பென்னம்பெரியதொரு முரட்டுக்கடாவாயிற்று. அதனை வர்த்தகர் தலைவனொருவன் விலைக்குக்கொண்டு அதன்முதுகிற் பெருஞ்சுமைகளையேற்றிக்கொண்டு, வர்த்தகத்தொழில்காரணமாக வர்த்தகர்பலரும் தானுமாய்ப் பலவிடங்களுக்குச்சென்று, கடைசியாய் உஞ்சயனீநகரத்துச் சிருப்பிரையாற்றுக்கயலில்வந்திறங்கினன். பெரும்பாரஞ்சுமந்து பெருவழிநடந்து களைப்புற்ற அவ்வெருமைக்கடாவை அதன்களைப்புத்தீரச் சிருப்பிரையாற்றிற்கிடந்து துளைந்து குளித்து வருமாறுவிடுத்தனன். அவ்வெருமைக்கடா நெடுநேரம் ஆற்று நீரில்மூழ்கிக்கிடந்து களைப்புநீங்கிக் கரையேறவே, அப்பொழுது தான் கரையயடுத்து ஆற்றுக்குவந்துகொண்டிருந்த அரசவன்னம் எனப்படும் அரண்மனைக்குதிரையைத் தூக்கியெறிந்து கொன்றுவிட்டது. அரசன் தனதுபட்டத்துக்குதிரையாம் அரசவன்னம் வணிகரது எருமையாற்கொல்லப்பட்டதெனக்கேள்வியுற்று ஆறுச்சினங்கொண்டு, வணிகரதுபொருளனைத்தினையும் பறிமுதல்செய்யவும் அவ்

வெருமையைப்பிடித்துக்கொணர்ந்து சித்திரவதைசெய்யவுங்கட்டளை யிட்டனன். உடனே ஊழியர்சிலர்சென்று வணிகரது பொருள்கள் யாவையும் கவர்ந்துகொணர்ந்தனர். கன்னெஞ்சராகிய வேறுசிலர் எருமையையிழுத்துவந்து நாலுகால்களையுங்கட்டிப் பொறிகளைக் களைந்து உறுப்புக்களையரிந்து காரநீரினைப்புகட்டிக் குதிரைச்சம் மட்டியால் அடித்துப் பலவாறுதுன்புறுத்திக்கொன்றனர். கொடும் பாவியாகிய அமிருதமதி அதன் வெந்தமாம்சத்தைத்தின்றதுமன்றி, அரண்மனையில்வளர்ந்துகொண்டுவந்த ஆட்டுக்கடாவின்தொடை மாம்சத்தையுந்தின்றுலொழியத் தன்னுசை தீராதென்றனள். வேலை யாட்கள் அவ்வாட்டினையும் கொல்லக்கொணர்ந்துநிறுத்தினர். அப் பொழுது அவ்வாட்டின்பக்கத்துநின்ற சேடியர்கள் அமிருதமதியின் தீயவொழுக்கத்தைக்கண்டு மனஞ்சகியாதவராய், "இப்பாவி மன் மதனையொத்த அழகுவாய்ந்த அரசனை நஞ்சிட்டுக்கொன்றனள். கண்ணெடுத்துப்பார்க்கவும் மனம்பொருத வொருகடையனைக் காம வெறிகொண்டு கூடிக்கலந்தனள். குட்டநோயுற்றவனும் இழிகுலத் தவனுமாகிய அட்டபங்கனைக் கூடியமர்ந்தபின், குட்டநோயினையும் சம்பாதித்துக்கொண்டனள். இவளது உடம்புமுழுவதும் இரணங் கண்டு அழுகிச்சொட்டுகின்றது. இவையாவும் இவள் இம்மையிற் செய்த தீவினைகளின்பயன்களேயாகும். இவளைச்சேரின், இவளது தீவினைகள் எம்மையுஞ்சாரும். இவள் இவ்வுலகினைவிட்டுநீங்கினும், இவளதுதீச்செயல்கள் எவராலும் மறக்கப்படாது இவ்வுலகினில் நிற்கும். இவ்விதநோய்களின்மீது ஆசைகொண்டோ, நல்லறிவில் லாமைகொண்டோ, தீயவல்வினைகளைத்தேடிக்கொண்டோ இப்பாவி எருமைப்பிணத்தையும் தின்றனள். நிற்க, இவ் வாட்டினையும் தின் னப்போகின்றனளே, என்ன அநியாயம்!" என்றனர். அப்பொழுது கொலைஞர்களாற் கொல்லப்பட்டுக்கொண்டிருந்த அவ்வாடு, அமிருத மதியைக்கண்டுணர்ந்து நெஞ்சம்புண்ணுகி "அடிபாவி! என்னை வெறுத்துப் பாவியாகியபாகனைவிரும்பிச்சேர்ந்தபயனே இவ்வாறு நீ உருக்குலைந்துநிற்பது. என்னையும் இன்னணமாக்கித்தீர்த்தனை. என்னையும் என்னன்னையையும் நஞ்சிட்டுக்கொன்றனையே. நாங்க ளிறந்தும் எங்கள்மீது உனக்குள்ளகோபம் தணிந்ததில்லைபோலும். மகிஷமாகப்பிறந்த என்தாயைத்தின்றுநிரப்பியவயிற்றில் என்னையு

மிட்டு அதனைநிரப்பப்போகின்றனைபோலுமென்று பலவாறுநினைந்து மொறுமொறுத்து உயிரொழிந்தது. அமிருதமதி ஆட்டிறைச்சியையும் தின்று திருப்தியடைந்தனள்.

இறந்துவிட்ட எருமையும் ஆடும் அந்நகரத்துப் புறச்சேரியிற் சேவல்களாகப்பிறந்துவளர்ந்தன. யசோமதியரசன் அக்கோழிகளைக்கண்டு களிப்புற்று, சண்டகருமனைவிளித்து அவன்கையிற் கொடுத்துவளர்க்கச்சொல்லவே, அவன் அவைகளைக்கொண்டுபோய்க் கூடுகளில்வைத்து நன்குவளர்த்தனன். அவைகள் இரண்டும் பருவமடைந்து சண்டையில் தேர்ச்சியடைந்தன. அவைகள் பார்ப்பவர்பிரமிக்குமாறு, முத்தொத்தகண்களும், அழகிய சியாமளநிறமான இறகுகளும், செம்பருத்திப்பூப்போன்று செவேரென்றுவிளங்குங் கொண்டையும், ஒளிருகின்ற பொன்னிறமானகால்களும், வைரமுட்களும், தளர்விலாவீரியமுமுடையனவாய்ச் சண்டையில் தமக்கிணையில் தாமேயென்று எவரும்சொல்லுமாறு ஒப்பற்றனவாய்ச் சுகமாகக் கூடுகளில் வாசமாயிருந்தன.

(தொடரும்.)

T. S. குப்புஸ்வாமிசாஸ்திரி.

ஸ்ரீ

புரஞ்சனோபாக்கியானம்.

———:(o):———

செந்தமிழ் (தொகுதி-கஉ பகுதி-௬ல்) கருo-ஆம் பக்கத் தொடர்ச்சி.

அவனுக்குத் தோழனொருவனுளன். யாவரும் அவன்செயலை யறிவாரேயன்றி அவன்பெயர் இன்னதெனை எவருமறியார். அவனே உலகின்செயலெல்லாவற்றினையும் அறிவான். அவ்வுயிர்த்தோழனோடு அவ்வேந்தன் இன்பமாகக் காலம்போக்கிவந்தான்.

இங்ஙனம்நிகழாநிற்புழி, புரஞ்சனன் தனக்கு மிக்கஇன்பந்தரவல்லதோரிடத்தை அடையநாடி, உலகமுழ்தும் சுற்றிவந்தான். பலநாட் சுற்றிச்சுழன்றுதேடியும், தன்மனத்திற்குப்பொருத்தமான

இடத்தைக் காணப்பெறாமையின், சிந்தையிற் றுயருழந்தான். அப்போதப்போது மனத்திலெழும் பல்வகைய இன்பங்களை நுகர்ந்து மகிழுக்கோலினவனாதலின், புரஞ்சனன், அவ்வின்பநுகர்ச்சிக்குரியகருவிகளைக் காணப்பெற்றிலனாய், எத்தனைநகரங்களை இப்பாரிடத்தேபார்த்தனனோ, அத்தனையும் தனதுவிருப்பிற்கமைந்தனவல்லவென் றெண்ணினான். இப்படி அவன்கண்ட ஒவ்வொருபட்டினமும் அமையாததாகவே, தக்கதொருநகரினைக்காண்பதிலே பெருநோக்குடையனாய், அம்முயற்சியைக்கைவிடாமலே இமயமலைச்சாரலிற்செல்லாநிற்புழி அவ்விடத் தொருதிவ்யநகரந் தோன்றக்கண்டனன்.

அஃது ஒன்பதுவாயில்களோடுகூடி மிகஅலங்காரமாய்விளங்கியது. மதில்களும், மாடங்களும், அகழ்களும், ஆராமங்களும், தோரணதம்பங்களும், பூரணகும்பங்களும், செம்பொன் வெண்பொன்மயமான மாடமாளிகைகளும், நவரத்நமயமான கூடகோபுரங்களும், மேடைகளும், தாமரையோடைகளும் உள்ளதாகிச் செல்வந்திகழ்தலால் அந்நகரம், போகவதியென்னும்நகரத்தை ஒத்தது. மற்றும் பலசபைகளும், நாற்சந்திகளும், வீதிகளும், கடைகளும், வேள்விச்சாலைகளும், *அன்னக்கொடிகளும், அக்கொடிமரங்கட்குப் பவளத்தாற்கட்டப்பெற்றதிண்ணைகளும் அந்நகரிற் பலவிடங்களிலும் விளங்கும். அந்நகர்ப்புறத்துள்ள உபவனங்களிற் பலபலவிருக்கங்களும், பூஞ்செடிகளும், கொடிகளும்வளர்ந்து அந்நகர்க்குப் பேரழகுசெய்யாநிற்கும். செங்கழுநீரோடைமுதலாய நீர்நிலைகளிற்பூத்துள்ள மலர்களின்மதுவையுண்டு வண்டினங்கள் பாடிக்களிக்கும். தாமரைமுதலியபூக்களின்தாதுக்களைக் கோதிப்புசித்து அன்னம்முதற் பலபறவையீட்டம் மதுரமாய்க்கூவிக்குலாவும். நீர்த்திவலைகளையும் மகரந்தப்பொடிகளையுமளாவி, மந்தமாய்வீசுந் தென்றலுலாவும் குளிரும்பொழிலில் வளருந்தளிரும், பூங்கொத்துக்களும், உதிர்ந்தமலர்நிறைந்த தாமரைத்தடங்களுமே அச்சோலைக்குப் பெருஞ்செல்வமாயின.

முனிவர்களுடையவிரதங்களைப்பூண்டனவாகியவிலங்குகள் அவ்வனத்திற்பல. ஆங்கு, மாங்குயில்கள் தீங்குரலாற்கூவுதல் நிரபேக்ஷனாகி வழியேசெல்லுமவனும் தம்மிடம் ஆசைகொண்டுவரும்படி

* அன்னக்கொடி—அன்னதானத்தைக்குறிக்குங்கொடி.

அழைப்பதுபோலத்தோன்றும். வண்டுகள்பாடும் மலர்ச்சோலைகளின் மீது மைம்முகில்படிந்துள்ளதோற்றம், அந்நகரமாதின் நறும்புகையூட்டிய கூந்தலின்தோற்றத்தையொக்கும். அந்நகரத்துள்ளமங்கையர் தமதுகூந்தலுக்கூட்டும் அகிற்புகையும், அன்னதானஞ்செய்வோரகத்திற்றோன்றும் அட்டிற்புகையும், மற்றும் ஆலைப்புகையும், வேள்விப்புகையும் எல்லாப்புறத்துஞ் செல்லாநிற்கின்றமையின், கொண்டல்களேழேயல்ல, பலவுளவென்னத்தோன்றும். அந்நகர்ப்புறத்துள்ள மலைகளின்மீது தேக்கு, சந்தனம், பாலை, செம்மரமுதலிய விருக்கவருக்கமும், மலைச்சாரலில் ஊக்கமுண்டாக்கும் காப்பிமுதலியவும் வளராநிற்கும்.

முல்லைப்புறங்களில், ஆநிரைமேய்க்கும் ஆயர்களதுவேய்ங்குழலோசையும், ஆய்ச்சியரதுகுரவைப்பண்ணும் அருமலிருக்கும். கானிடை மயில்களாடும். கயத்தினில் அன்னமாடும். மலர்களில் வண்டுபாடும். வயல்களில் தண்ணீர்பாய்ச்சிச்சேறுண்டாக்கித் தழைபெய்துழக்கி எருவட்டி உழுது பண்படுத்தி வித்துவித்துவார். நாறு வளர்ப்பார். அக்கழனிகளிற் களைபறிக்குங்கடைசியருடைய முகமுங் கண்ணும் வாயும், முளரி குவளை ஆம்பலென்றுமயங்கி, அவற்றில் வண்டுகள்வீழும். அப்பெண்களின்காதழகை வள்ளைகாட்டும். கையழகைக் காந்தள்காட்டும். பல்லழகை முல்லைகாட்டும். சொல்லழகைக் குயில்கள்காட்டும். இடையழகைக் கொடிகள்காட்டும். நடையழகை அன்னங்காட்டும். தாய்க்குரங்கின்கையிலுள்ளபலாச்சுளையைக் குட்டிக்குரங்கு தட்டிப்பறித்துக்கொண்டு வாயைக்குதப்பி மருட்டிவிழிக்கும். கோயில்களிலுண்டாகும் முழவொலியை முகிலொலியென்று மயங்கி மந்திகள் மரத்தின்மேலேறி வானத்தைநோக்கும். கொண்டல் முழவொலிசெய்தலாலும், வண்டுகள் ரீங்காரச்சுருதிசெய்தலாலும், குயில்கள்பாடுதலாலும், மயில்கள்ஆடுதலாலும் அச்சோலை ஒரு நாடகசாலைபோலத்தோன்றும். அங்குள்ள அசோகமும் தாமரையும் மலர்ந்துதோன்றுதல் விளக்கெடுத்ததுபோலவும், குவளைகண்மலர்ந்த தோற்றம் கண்விழித்துப்பார்த்தல்போலவும், நீர்த்திரைகளசைந்து தோன்றுதல் திரையிட்டதுபோலவும், பலபறவைகள் ஒலித்தல் அந்நாடகச்சிறப்பை வியந்துபேசுதல்போலவும் விளங்கும்.

இவ்விநோதங்களைப்பார்த்துக்கொண்டு சிலமகளிர் தங்காதலரோடு கைகோத்துலாவுவர். சிலர் பூக்கொய்துசூடுவர். சிலர் பூம்புனலாடுவர். சிலர் செய்குன்றிவர்வர். துறக்கத்திலுள்ளனயாவும் இங்குள்ளன. இங்குள்ளனவெல்லாம் அங்கில்லையெனத்தக்கபெருஞ் செல்வத்தையுடையது அந்நகரம்.

அம்மாநகரின்பெருஞ்செல்வத்தையும் பேரழகையுங்கண்டன்றோ அளகை வடபாற்போய்மறைந்தது; அமராவதி வானத்தொளித்தது. இலங்கையுங் கடலிற்புகுந்தது. அன்றியும், இந்திரன் தன் நகர் அழகழிந்ததெனவும், குபேரன் தன்பதி எழில்குறைந்ததெனவும், மற்றைக்கடவுளரும் தத்தம் நகரங்கள் பொலிவிழந்தனவெ ாவும் வெறுப்புறும்வண்ணம் மயன் மனத்தாற்சமைத்ததெனலாம். இன்னும், அது பார்த்தளவிற்கண்பறிக்கப் பகலெறிப்பப் பொன்னுருக்கி வார்த்துப் பன்மணிகுயிற்றியதெனப் பகலிரவுபகுக்கலாகாதுவிளங்குவது. அச்செல்வத்திருநகரின் இல்லங்களினெழும் அகிற்புகை மேகம்போலத்தவழ்தலாலும், முழவுகள் முகிலினம்போலமுழங்குதலாலும், மகளிர் கொடிமின்னற்போலத்தோன்றுதலாலும் மாடங்கள், மலைகளைப்பொருவும். அம்மாடங்களின்மீது மகளிரும் மைந்தரும் கூடித்திகழ்தல் மலையின்மீது காமவல்லியுங் கற்பகதருவுங் கலந்து வளர்தல்போலும். அந்நகரத்துவீதிகளில் மாதர்களது அலத்தகச் சிறடிச்சுவடுதோய்ந்துள்ளதோற்றம் புலத்திடைச் செந்தாமரைபூத்ததுபோலும். பலவாறுபன்னுவதேன்? அந்நாடு தடங்கடற்பொய்கையிற்பூத்த நிலத்தாமரையின்பொகுட்டையொக்கும். அந்நகரமோ அப்பொகுட்டின்மேலுறையும் திருமகளையொக்குமெனுஞ் சிறப்பு வாய்ந்திலகுவது.

இத்தகைப் பெருஞ்சிறப்புடையதாகும் அந்நகரத்தினின்று புறப்பட்டனள் ஒருபேரழகுள்ளமங்கை. அவள், கொண்டலைவென்ற கூந்தலாள்; பிறையினைவென்ற நுதலினள்; வில்லினைவென்ற புருவத்தினள்; குவளையைவென்ற கண்ணினள்; குமிழினைவென்ற மூக்கினள்; பவளத்தைவென்ற இதழினள்; முல்லையைவென்ற பல்லினள்; வள்ளையைவென்ற காதினள்; முழுமதியைவென்ற முகத்தினள்; கமுகினைவென்ற கழுத்தினள்; வேயினைவென்ற தோளினள்; காந்த

ளைவென்ற கையினுள்; கோங்கினைவென்ற கொங்கையினுள்; கொடியினைவென்ற இடையினுள்; வாழையைவென்ற தொடையினுள்; வனஜமலரைவென்ற அடியினுள். அவள் இழைக்கு ஆயிரம்பொன் பெற்ற இந்திரநீலப்பட்டுடுத்து, தலைமுதற் கால்வரையில் ஸ்வர்ணுபாணங்களும் ரத்நாபரணங்களும்பூண்டு, நாணத்தினுற் சிறிது தலை குனிந்து, அன்னமும் பிடியானையும் செருக்கடங்கி ஒதுங்க, மந்தமாயசைந்து, மேலேயுள்ள அவயவபாரத்தினுலும் ஆபரணபாரத்தினுலும் இடைதுவண்டுதள்ளாட, தண்டை சதங்கை காலிற்கிடந்தரற்ற, அந்நகரத்தின்தேவதையோவென்னும்படி வருகின்முள். அவளுக்குப் பிரதானமந்திரிகள்பதின்மர். அவருள் ஒவ்வொருவர்க்கும் சேனைத்தலைவர் நூறுபெயர் உளர். அவளதுநகரத்தை நாற்புறத்தும் ஐந்தலையரவு உறக்கமின்றி எக்காலும் காவல்செய்கின்றது. அப்பாம்பினுக்குத் தினம்ஒவ்வொருவேளைக்கு ஆமலகத்தளவினையுடைய ஐந்துசோற்றுருண்டைவேதனம் ஏற்பட்டுள்ளது. புன்முறுவல் பூத்த முகத்தழகியாகிய அம்மங்கையர்க்கரசி தனக்கு எதிராய்வருவதைப் புரஞ்சனவீரன்கண்டனன். கண்டவன் அவளுடையபேரெழிலாற்கவரப்பட்டு, அவளைநோக்கி விநோதமாகச் சில உரையாடலுற்முன்: அவன் அவ்வாறுநகையாடி உரையாடற்கு ஏது அன்பும் அழகும் உருவெடுத்தாற்போன்ற அவளுடையகடைக்கண்பார்வையாகிய மதனசரத்தினுல் அடிபட்டுமயங்கினமையே. அவன் இவ்வாறு உரையாடுவானுயினன். "ஏ! குவளையிதழ்போலும் கண்ணழகுள்ள பெண்ணரசே! நீயார்? உன்னைத் திருமகளாகப்பெற்றபுண்ணியவான் எவன்? நீ எங்கிருந்துவருகின்முய்? இப்பூங்காவனத்திற்கு அணித்தாயுள்ளநகரத்திலிருந்து யாதுசெய்யவிரும்புகின்முய்? உன்னைப்பின்ருெடர்ந்துவருகின்ற இப்பதினெருசுத்தவீரர் யாவர்? இவர்கள் செய்யும் தொழில்யாது? இங்குள்ளமங்கையர் யாவர்? காமதேவனது கையில்லான கரும்புருவத்தைவென்ற கரும்புருவத்தைக்கொண்டு காமுகர்கருவத்தைவென்றுவருங்காரிகையே! உன்முன்னேவாரா நின்ற இவ்வரவு யாது? ஏ! பெண்கள்நாயகியே! நீ மலைமகளோ? மலர்மகளோ! கலைமகளோ? இந்நிலமகளோ? இவ்வுவனத்தில் யோகிபோல ஏகாந்தமாயிருக்கும்பதியைத்தேடிவருகின்முய்போலக் காணப்படுகின்முய். நீதேடும்பதியானவன் நின்னடித்தாமரையின்

கண்வைத்தபோன்பினுலே ஸமஸ்தமநோரதங்களையும் அடைந்தவளு யிருத்தல்வேண்டும். உன்கையினின்றும் எப்போதும்நழுவாத தாமரைப்போது இப்போது எங்குநழுவிவிழுந்துவிட்டது? திரிமூர்த்திகளின் தேவிமாரில் நீ ஒருத்தியுமல்லை; பூமி உன்பாதஸ்பர்சம்பெற்றமையே அதற்குக்காரணம். யஜ்ஞபுருஷனுகிய ஸ்ரீமந்நாராயணனேடு வைகுண்டநகரத்தை ஸ்ரீமகாலக்ஷ்மி அலங்கரிப்பதேபோல, உயர்ந்த புண்ணியம்பண்ணிய உத்தமவீரனேடு இந்நகரத்தை நீ அலங்கரிப்பாயாக."

(இன்னும்வரும்)

கா. ஸ்ரீ கோபாலாசாரியர்.

ஸ்ரீ:

தமிழ்நேயர்களுக்கு ஒரு விஜ்ஞாபனம்.

"செந்தமிழ்" த்தொகுதி-௯௨ பகுதி-௫ல் கம்பரதுகருத்தமைதி என்னும் விரித்துரையுள், தமிழினும் வடமொழி மிக்கதிட்பமுடைய தெனக்காட்டியிருப்பது சில தமிழ்நேயர்களுக்குத் திருப்திகரமாயில்லாதிருப்பதுபற்றி, அவர்களும் திருப்தியடையுமாறு அதனைச் செந்தமிழினின்று எடுத்துவிடப்பட்டதாகப் பாவிக்கவேண்டுமென்றும், செந்தமிழில்வெளிவரும்விஷயதானங்களின் அபிப்பிராயபேதத்தைச் சங்கத்தாரங்கீகரித்ததாகக்கொள்ளாது நிருபநேயர்களுடையதாகவே கொள்ளவேண்டுமென்றும் இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்திராதிபர்.

உ

செல்வநூல்.

ECONOMY.

——— ———:(o):———

செந்தமிழ் (தொகுதி கஉ பகுதி ௬) உ௬௧-ம் பக்கத் தொடர்ச்சி.

அத்யாயம் 13.

தொழிற்கட்டுப்பாடு. சமுசு.

73. முதலாளிக்கும் வேலைக்காரருக்கும் பரஸ்பரவிரோதமேற்படுவது இயற்கை. முதலாளி, எப்பொழுதும் கூலியைக்குறைத்து அதிகலாபமெடுக்கமுயல்வான். கூலிக்காரனோ முதலாளிக்குவரும் லாபத்தைக்குறைத்தாவது தான் அதிகக்கூலிவாங்கமுயற்சிசெய்வான்.

74. தொழிற்கட்டுப்பாடு:—இதைப்பற்றி இந்தப்ரகரணத்தில் விவரிப்போம். ஒரேதொழிலாளிகள், தங்களுக்குள்ள பரஸ்பரப் போட்டியால் வேலையினிமித்தம் கூலியைக்குறைத்துத் தங்களினத்துக்கே கெடுதிசெய்துகொள்வது வழக்கம். இதனால் முதலாளிக்கு லாபம். இவ்விதக்கெடுதியைநீக்கும்பொருட்டு அத்தொழிலாளிகள் ஒன்றுசேர்ந்து கட்டுப்பாடுசெய்து இன்னவேலைக்கு இவ்வளவுகூலிக்குக்குறையாமல்வாங்கவேண்டும், குறைந்த கூலிவாங்குபவனுக்கு முறைப்படி அபராதம்விதிக்கப்படும் என்று சிலநிபந்தனை ஏற்படுத்திக்கொள்வதுண்டு. இதுதான் தொழிற்கட்டுப்பாடு என்பதாம். இதனால் தொழிலாளிகளுக்குத் தக்கசம்பளம்வருவதுடன், தொழில்திறமும் மேன்மேலும் விருத்தியடையும்.

75. சமுசு:—(Strike) மேற்கூறியகட்டுப்பாடு முதலாளி தொழிலாளி இருவகுப்பினருக்கும் நலந்தரத்தக்கதுதான். இத்துடனில்லாமல், கட்டுப்பாடுபலப்பட்டுவிட்டதென்றஹங்காரத்தாற் சிலசமயங்களில், தொழிலாளிகள் சமுசுகட்டுவதுவழக்கம். அதாவது நிஷ்காரணமாய்த் திடீரென்று இருமடங்குகூலிகேட்பது, வேலையைத் திடீரென்றுயர்த்துவதுமுதலானவையேயாம். அதனாற் பலதுன்பங்கள் நேரிடுகின்றன. முதலாளி தனிகனானால், ஒருமாசம் வேலையை

நிறுத்திவிட்டு, "வயிறுகாய்ந்தாற் பயல்கள் தாங்களேவருவார்கள்" என்று சும்மாஇருந்துவிடுவான். அதனால் அற்றைக்கூலியாற்சீவனஞ்செய்வோர் கஷ்டப்படுவார்கள். மறுபடி வேலையிற்சேர்ந்தபொழுது எஜமானன்சொன்னபடியெல்லாம் கேட்கவேண்டும். சமுசுக்குத்தலைவர்களாயிருந்தவர்களை முதலாளி வேலையிலிருந்து தொலைத்துவிடுவான். இதனால் பூர்வஸ்திதிக்கே குறைவுவந்துவிடுகிறது.

முதலாளிதனிகனாயில்லாவிட்டால், தொழிலையேமுறித்துவிடுவான். அதனாலும் முன்கூறியபடி கூலிகளுக்குக் கஷ்டம். முதலாளிக்கும் நஷ்டந்தான். ஆயினும், கூலிகளும் தங்கள்கஷ்டத்தைக் கவனிக்கவேண்டியதுதானே. ஆகையால் மிதமிஞ்சி எந்தக்காரியமுஞ் செய்யலாகாது.

அத்யாயம் 14.

தனித்தொழில். கூட்டுத்தொழில்.

76. மேற்கூறியவாறு முதலாளிக்கும் கூலியாட்களுக்குமுள்ள பரஸ்பரவிரோதத்தைநீக்கி இருவகுப்பினரும் ஒன்றுசேர்ந்துவேலைசெய்து நன்மையடையும்பொருட்டுச் சிலவுபாயங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அவையாவன:—

77. தனித்தொழில்:-கூலிக்காரனே தன்னுலியன்றமுதல்போட்டு வேலைசெய்வது. இதிற் கூலிக்காரனும் முதலாளியும் ஒருவனாகவே ஏற்பட்டுவிட்டதால், பரஸ்பரவிரோதம் ஏற்படமாட்டாது. வேலைக்காரன் எவ்விதத்திலும் தான் கூடியவரைபாடுபட்டு லாபமடையப்பார்ப்பான். அப்படிக்கல்லாது முதலாளி வேறொருவனானால் வேலைக்காரன்பட்டபாட்டின்பிரயோசனத்திற் குறிப்பிட்டகூலிபோக மீதமெல்லாம் முதலாளியையல்லவோசேரும். ஆதலாற் கூலிக்காரன் தன்கூலியை உயர்த்துவான், அல்லது கடனைக்கழித்துக் காலத்தைப் போக்கிவிடுவான்.

78. கூட்டுத்தொழில்:—அதாவது முதல்போடுபவன் ஒருவன், வேலைசெய்பவன் இன்னொருவன். ஆனால் வேலைக்காரனுக்கு இந்தத்தொழிலபிவிருத்தியில் ஒருவித அபிமானமிருக்கும்பொருட்டு வரும்லாபத்தில் ஒருபங்கு கொடுப்பதுண்டு.

உதாரணம்:—

முதலாளிபோட்டமுதல் ரூ ... 4000

	வரவு	செலவு
	ரூ. அ. ப.	ரூ. அ. ப.
அதற்கு மாதம் 100க்கு ½ரூ வட்டிவிதம்		20—0—0
கூலிக்காரனுக்குக்கூலி மாதம்ஒன்றுக்கு		20—0—0
மாதம் ஒன்றுக்கு ஆதாயம் வரவு	80—0—0	
மொத்தம் வரவு செலவு	80—0—0	40—0—0
பாக்கிலாபம்	40—0—0	
முதலாளிக்கு ¾ பங்கு		30—0—0
கூலிக்காரனுக்கு ¼ பங்கு		10—0—0
	40—0—0	40—0—0

இதிற் கூலிக்காரன், தனக்குக்கிடைக்கும் 20 ரூபாய்க்கூலிதவிர தன்வேலைக்குத்தக்கவாறுமிகும்லாபத்திலும் ¼ பங்குகிடைக்குமாகையால் அவ்வேலையில் அதிகச்ரத்தையுடையவனாயிருப்பான். அப்படிக்கல்லாமல் இதேவேலைக்காரனுக்கு இதேதொழிலில் (20+10=) 30 ரூபாய்கொடுத்தாலும், லாபத்திற்பங்கு என்பதிற்போல அவ்வளவு சுறுசுறுப்பாய்வேலைசெய்யமாட்டான். அச்சாபீஸில் அச்சுக்கோப்பவனுக்கும் லாபத்திற்பங்குண்டென்றால் சீக்கிரந்தான்வேலைமுடியும். இதனால், திட்டக்கூலியைப்பார்க்கிலும் லாபத்தில் ஏதாவது ஒருபங்கு கொடுப்பதே வேலைக்காரனைச் சுறுசுறுப்பாய்வேலைசெய்யச்செய்யும்.

அத்யாயம் 15.

ஐக்கியமுறை.
(Co-operation.)

79. தனித்தனியேசெய்வதைப்பார்க்கிலும் பலர்சேர்ந்து ஒரு காரியத்தைச்செய்வதே கூட்டுமுறை எனப்படும். ஒரு ஊரில் 100

நெசவுகாரர்களிருப்பதாய்வைத்துக்கொள்வோம். அவர்கள் தனித் தனியே கைநெசவுசெய்து மாதம் 20 ரூபாய்சம்பாதித்து ஜீவித்துவந்தார்கள். அடுத்தவூரிற் சீமையிலிருந்து புதிதாய் நெசவு ஆலைதருவித்துச் சிலர்வேலைசெய்கின்றார்கள். அதினின்றும் உண் டாகுந்துணிகள் நயமாயும் விலைஸரஸமாயும் இருப்பதால் இவர்கள் பிழைப்புக் கெட்டுவருகின்றது. இந்நிலைமையில் அதேமாதிரி நெசவு சாலையேற்படுத்தி இந்த 100 பேர்களும்வேலைசெய்தால், அயலூர்ச் சரக்குத் தம்மூருக்குவராமலிருப்பதுடன் மறுபடி தங்கள்பிழைப்பும் நடக்கும். இதற்கு 10000ரூ முதல்வேண்டும். தக்கமுதலாளி யில்லை. அப்பொழுது, பங்கொன்றுக்கு 10 ரூபாய்வீதம் 1000பங்கு சேர்த்து இத்தொழிலாளிகளே தங்களாலியன்றபங்குகள்சேர்ந்து, 10000ரூ சேகரித்து நெசவுசாலைஸ்தாபித்து வேலைநடத்துவார்கள். இதுதான் கூட்டுமுறையெனப்படும். இதில் ஒருவனாலாகாதபெருங் காரியத்தைப் பலர் ப்ரயாஸையன்னியில் நடத்துகிறார்களல்லவா? இதேமாதிரி ஒவ்வொருதொழிலிலும் ஐக்கியமுறை ஏற்படுத்தலாம்.

80. ஐக்கியலேவாதேவிச்சங்கங்கள்:—(Co-operation Credit Societies) ஒருவன் மாதம் ஒன்றுக்கு 5 ரூபாய் மீதம்வைப்பதாய் வைத்துக்கொள்வோம். அதைத் தக்கஇடத்தில் வட்டிக்குக்கொடுத் தால், அவன்மீதங்கள் ஒன்றுசேர்ந்து கூடியசீக்கிரம் பொருள்சேரும். அவ்வளவுசொற்பத்தொகையை வட்டிக்குக்கொடுத்துவைக்கச் சரி யானபுள்ளிதேடவேண்டும். இதேமாதிரி ஒருவனுக்கு விவசாயச் செல்வுக்காக 50 ரூபாய் கடன்வேண்டும். சமயத்திற்கிடைத்தால், 6-வதுமாதத்தில் 100 ரூபாய்வரும்படிவரும். இவனுக்கு வேறு ஐவேஜில்லை. வட்டிக்கடைக்குப்போனால் தக்கஜாமீன்கேட்பான். வட்டியும் அதிகமாய்க்கேட்பான். ஆகையால், சொற்பப்பணத்தை வைத்துக்கொண்டு போடஇடமில்லாமல் திகைப்பவர்சிலர், சொற்பப் பணங்கூடக் கடன்வாங்கமுடியாமல் திண்டாடுபவர்சிலர். இவ்விரு வகுப்பினர்கஷ்டங்களையும்நிவர்த்திக்க மேற்கூறிய ஐக்கியலேவாதே விச்சங்கங்கள் ஏற்படுத்துவதுண்டு. இந்தச்சங்கத்திற்சேர்க்கப்பட்ட எல்லாருடையபணத்துக்கும் எல்லாரும் பாத்யஸ்தர்கள், எல்லாரு டையகடனுக்கும் எல்லாருங்கட்டுப்பட்டவர்கள் என்றமுறையால் இச்சங்கங்கள் நடத்தப்பட்டுவருகின்றன. இதில், சொற்பமீதத்தைப்

போடுவதற்கும் சொற்பக்கடனைச் சொற்பவட்டிக்குவாங்கிச் சொற்ப காலத்தில் திருப்பிக்கொடுப்பதற்கும் சௌகரியமுண்டு. கொஞ்சம் நஷ்டம்வந்தாலும் அதிகமாய்ப்பாதிக்கமாட்டாது.

81. ஐக்கியவியாபாரச்சங்கங்கள் :— (Co-operative Stores) சிலருக்கு நெல்லும், சிலருக்குத் துவரையும், சிலருக்கு எள்ளும், சிலருக்கு உப்புமாக இவ்வாறு பலவிதமானமகசூல்கள்விளையும். நெல் வருமானமுள்ளவன், தன்மகசூலை வண்டியிலேற்றிச் சந்தைக்கு அல்லது பேட்டைக்குக்கொண்டுவந்து சாப்பாடுமுதலான தன்செல வெல்லாஞ்செய்து, தாகுகொடுத்து அதைவிற்றுத் தனக்குத்தேவை யான இதரசாக்குகளைப் பலஇடங்களில்வாங்கவேண்டும். கலம் 10 ரூ விற்றாலும் இவனுக்குச் செலவெல்லாம்போகமீறுவது 9 ரூபாய்தான். கலத்துக்கு 1 ரூபாயை மத்யஸ்தர்களான வண்டிக் காரன், கூலிக்காரன், சாப்பாடுபோடுபவன், தரகன்முதலியவர் கள் சாப்பிட்டுவிடுகிறார்கள். இதேமாதிரி ஒவ்வொருசரக்குடையவனும் கஷ்டப்படுகிறான். ஆகையால், நெல்லுடையவன் கஷ்டப்பட்டு விற்று, அதிகவிலைக்கு மற்றப்பொருள்களைவாங்கி மறுபடியும் செலவுடன் வீடுபோய்ச்சேரவேண்டியிருக்கின்றது. இந்த அசௌகரியத்தைநிவர்த்திக்கத்தான் மேற்கூறிய ஐக்கியவியாபாரச்சங்கங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அதன்முறைப்படி, எல்லாமகசூல்காரனும், அதிற்கூட்டாளிகள். அவனவன், தன்தன்சாக்கை மத்யஸ்தனுதவியில்லாமலே ஒரேயிடத்தில், சங்கத்தில் ரொக்கத்துக்குவிற்றுத் தனக்கு வேண்டியசாக்கை ஒரேயிடத்தில் ரொக்கத்துக்குவாங்கிப்போவான்.

அத்யாயம் 16.

வரத்தும் ப்ரியமும்.

(Supply and Demand)

82. ஒருசரக்கின்அகவிலை, (Market price) அதன்வரத்தையும் ப்ரியத்தையும்பொறுத்து நிர்ணயமாகின்றது.

83. வரத்து (Supply) குறிப்பிட்டஇடத்திற் குறிப்பிட்ட காலத்தில் விற்பனைக்கு அல்லது பரிவர்த்தனைக்குத் தயாராயிருக்கும்

ஒருசரக்கின் அளவே அச்சரக்கின்வரத்து எனப்படும். ஒருசந்தையில் 100சேர்நெய் விற்பனைக்குவந்திருந்தால், நெய்வரத்து 100சேர் எனப்படும்.

84. ப்ரியம். (Demand) குறிப்பிட்டஇடத்தில் குறிப்பிட்ட காலத்தில் விலைக்கு அல்லது பரிவர்த்தனைக்குச் செலவாகக்கூடிய அளவே அச்சரக்கின் ப்ரியம் எனப்படும். அதேசந்தையில், 80சேர் நெய்தான் வாங்கக்கூடியமனிதர்கள்வந்திருந்தால், அச்சந்தையில் 80படிநெய்க்குத்தான் ப்ரியம் எனப்படும்.

85. அகவிலை. (Market price) வரத்தையும் ப்ரியத்தையும் சமப்படுத்தும்விலையே அகவிலையெனப்படும். மேற்கூறியவுதாரணத்தில், நெய்விற்று உப்புப்புளிவாங்கிப்போகவாவது ரொக்கம்பெற்றுச் செல்லவாவது நெய்க்காரர்வந்திருப்பதாகவைத்துக்கொள்ளுவோம். கொண்டுவந்தநெய் விற்றால்தான் அவர்களுக்கு அந்தவாரப் பிழைப்புநடக்கும். ஆகையால் அவர்கள், படிஒன்று $2\frac{1}{2}$ரூபாய்வீதம் விற்கவெண்ணிவந்தாலும், வரத்தின்அதிகத்தாலோ அல்லது ப்ரியக்குறைவாலோ தங்கள்ஆத்திரநிமித்தம் படிஒன்று 2ரூ வீதமாவது விற்றுப்போவார்கள். அதேமாதிரி, $2\frac{1}{2}$ரூபாய்க்குவிற்கும்நெய் 2 ரூபாய்க்குவிற்பதானால், 1படிவாங்கிச்செல்லலாமென்று $2\frac{1}{2}$ரூபாய் கொண்டுவந்தவன்கூட, $1\frac{1}{4}$படிவாங்கிச்செல்வான். ஆகையால் வந்த 100படிநெய்யும், 2ரூபாய்வீதம் செலவாகின்றது

86. விவரம்.

வரவுநெய்	ப்ரியம் Demand	விற்பனை	மொத்த விலை	படிவிலை	மீதம்
100 படி	80 படி	80 படி	ரூ. 200	ரூ. $2\frac{1}{2}$	20 படி
100 படி	100 படி	100 படி	ரூ. 200	ரூ. 2	இல்லை
100 படி	120 படி	100 படி	ரூ. 300	ரூ. 3	இல்லை

இதேமாதிரி, வரத்து 100படிமாத்திரமிருக்க 120படிவரை வாங்குவோரிருந்தால், நெய்க்காரன் சாதாரணமாய் $2\frac{1}{2}$ரூபாய்க்குவிற்றநெய்விலையை 3 ரூபாய்க்கு உயர்த்திவிடுகின்றான்.

87. வரவு பிரியத்தைப்பற்றியவிதிகள். (Laws of supply and demand)

(1) விலையுயர்ந்தால் வரவு (Supply) அதிகரிக்கும். பிரியம் அல்லது தேவை (Demand) குறையும்.

(2) விலைகுறைந்தால் வரவுகுறையும். பிரியம் அதிகரிக்கும்.

(3) வரவு அதிகரித்துப் பிரியங்குறைந்தால் விலைகுறையும்.

(4) வரவுகுறைந்து பிரியம் அதிகரித்தால் விலையுயரும்.

விலை	வரவு (Supply)	பிரியம் அல்லது தேவை (Demand)
ஜாஸ்தி (ஆனால்)	ஜாஸ்தி	குறைவு
குறைவு (ஆனால்)	குறைவு	ஜாஸ்தி

88. பிரியத்துக்குத்தக்கவிலை. (Price depends upon demand) ஒருபண்டத்தின்விலை அதன்பிரியத்துக்குத்தக்கபடி இருக்கின்றது. முன்கூறியபடி ஒருசந்தையில் ஏதாவது ஒருசாக்குக்கு அதிகப்பிரியமிருந்தால் அதற்குத்தக்கபடி விலையேற்றமும், ப்ரியக்குறைவானல் அதற்குத்தக்கபடி விலையிறக்கமும் ஏற்படுகின்றன.

89. வரவுக்குத்தக்கவிலை (Price depends upon supply) இதேமாதிரி, ஒருசந்தையில் திடீரென்று அதிகச்சரக்குவந்துவிட்டால் விலைகுறையும். சரக்குவரத்துக்குறைவானல் அதற்குத்தக்கபடி விலையுயரும்.

90. வரவுக்கும் பிரியத்துக்குந்தக்கவிலை. (Price depends upon supply and demand) வரவுக்கும் ப்ரியத்துக்குந்தக்கபடி விலையேற்படுகின்றது. அதிகவரவும் ப்ரியத்தாழ்வுமானல், விலைகுறையும். குறைந்தவரவும் அதிகப்பிரியமுமானல் விலை யுயர்கின்றது. வரவும் ப்ரியமும் சமமானல் விலை சாதாரணமாயிருக்கின்றது.

அதிகவரவு + பிரியக்குறைவு = விலைக்குறைவு.

கொஞ்சவரவு + அதிகப்பிரியம் = விலையுயர்வு.

[வரவு = பிரியம்] = சாதாரணவிலை.

91. வேலையும் விலையும். சிலசமயங்களில் வேலைப்பிரியத்தாற் கூலி அதிகமாய்க்கொடுக்கவேண்டியிருக்கும். அதற்குத்தக்கபடி சரக்குகளின்விலை யுயரும். ஆனால் ஜாஸ்திவேலைக்குத்தக்கபடி உயர்ந்தவிலையும், குறைந்தவேலைக்குத்தக்கபடி குறைந்தவிலையும் என்று எண்ணலாகாது. புஸ்தகமெழுதி அச்சுக்கோத்து அச்சடிப்பது எவ்வளவோச்ரமமானவேலை. ஆயினும் அந்தப்புஸ்தகத்தின் விலை சொற்பமாயிருக்கின்றது. இதற்குக்காரணம், அந்தப்புஸ்தகம் அதிகமாய்விற்பனையாதலும், அதற்குத்தக்கபடி ஏராளமான ப்ரதிகள் அச்சடிக்கவேண்டியசாதனங்களிருப்பதுமே. அதேபுஸ்தகத்துக்கு ப்ரியக்குறைவானால், அந்தப்ரதிகளுக்கு ஜாஸ்திவிலைவைத்துத்தான் விற்கவேண்டும். 300பக்கமுள்ள ரெய்னால்ட்நாவல்ப்ரதியொன்று 12 அணாவுக்குவாங்கலாம், ஏனென்றால், ப்ரசுரமானதும் 10000-பேர் வாங்கத்தயாராயிருப்பார்கள். அதேயளவுள்ள சாஸ்த்ரம், வேதாந்தம்முதலான அரியநூல்கள் ப்ரதிஒன்று 10-ரூபாயாகவிற்கும். அதற்குக்காரணம் ப்ரியக்குறைவே. கொலம்பஸ் வடஅமெரிக்காவுக்குச்சென்றகாலத்தில், அத்தேசத்துப்பூர்வகுடிகள், தங்கக்கட்டிகளையும் மணல்களையும் கொண்டுவந்துகொடுத்துக் காலணாக்கூடப் பெறாத பித்தளைச்சதங்கைகள்வாங்கிப்போவார்களாம். அவ்வமெரிக்கர்களுக்குச் சுலபமாகத் தங்கக்கட்டிகிடைத்ததால், அதன்விலை குறைந்துபோயிற்று? இதனால், வேலையைப்பொறுத்துவிலையல்ல என்பதும், ப்ரியத்துக்கும் வரவுக்குந்தக்கபடிதான் விலையென்பதும் விளங்கும்.

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல்.

ஸ்ரீ:

திருக்கோளூர்ச்சாசனங்கள்.

செந்தமிழ் (தொகுதி-கஉ பகுதி-ருல்) கக௬சு-ஆம் பக்கத் தொடர்ச்சி.

சாசனம் VII.

சுவாமி வைத்தமாநிதியின்கர்ப்பக்ருஹம் வடபுறம் உச்சி.

காலம்:—மாறவர்மன் சுந்தரபாண்டியற்கு யாண்டு 11-வது.

விஷயம்:—திருக்கோளூர்ப் பூரங்குறிச்சியூரார், தங்களூர் அது வரை ஒட்டுக்கடமையாயிருந்தபடியால் ஊர் குடியில்லாமற் பாழாய்ப் போய்விட்டதென்று மந்திரி மழவைராயன்மூலம் ஷை அரசனுக்கு அறிவிக்க, அவனும் அவ்வூரை அளந்து விளைந்தநிலத்துக்கு இவ்வளவென்று கடமையேற்படுத்தியது.

குறிப்பு:—பாண்டிநாடு அளக்கப்பட்டபோது இவ்வூரும் முதல் வீரபாண்டியன்காலத்தி லளந்து தரம்விதிக்கப்பட்டிருந்ததென்றும், (சர்வே, ஸெட்டில்மெண்டு) அக்காலத்து நிலம்அளக்கும் 18-அடிக் கோலுக்கு வீரபாண்டியன்கோலென்றும் மரக்காலுக்கு முதல்வீர பாண்டியனென்றும் பெயரிடப்பட்டிருந்ததென்றும் தெரிகிறது. அக்காலத்தில் விளைந்தநிலத்துக்குமாத்திரம் தீர்வைவிதிக்கும்படி ஏற்பாடுசெய்யப்பட்டது.

மெய்க்கீர்த்தி.

ஆழ்வார்திருநகரிப் பாண்டியசாசநம் V, VII பார்க்க.

கோமாறவர்மன் சுந்தரபாண்டியதேவற்கு யாண்டுபதினொன்றாவது நாள்முப்பதினல் மதுரோதையவளநாட்டு மாடக்குளக் கீழ்மதுரைக் கோயிற் பள்ளியறைக்கூடத்துப் பள்ளிப்பீடமழவராயனில் எழுந் தருளியிருந்து திருவழுதிவளநாட்டுத் திருக்கோளூர் பூரங்குறிச்சி ஊரார் செயதிருவாய்மொழிந்தருளினபடி தங்களூருக்கு இவ்வூர்கள் முன்பு ஒட்டுக்கடமையாக இறுத்துப்போதுகையாலே குடியிலி பாழ(ாய்)க்கிடக்கையில் இவ்வூர்கள் நான்கெல்லைக்குட்பட்ட நிலத்தில் பழம்தேவதானபள்ளி(8)ச்சந்தம்நீக்கி நீக்கிஉள்ளநிலம் பதினெட்(ட) டியானவீரபாண்டியன்கோலால் நிலம்அளந்து பயிர்பார்த்து விளைந்த நிலத்துக்குக் கடமையும் அந்தராயமும்உள்பட காருக்கு மரக்கால்(?)

காசு அறுமாவ(9)ரையே அரைக்காணியும் முதல்வீரபாண்டியனல் நெல்லு நாற்கலமும் இறைப்பு இறைத்துவிளைந்தநிலத்துக்கு இவ் வரிசையில் ஒன்றுபாதியும் எள் வரகு தினை சாமை விளைந்தநிலத் துக்கு மரக்கால் பதினறுமேனித்திரமும் (10) ஒன்றும் (?) பசானத் துக்கும் இவ்வரிசையும் புஞ்சைக்கு மரக்கால் இத்திரம் முக்காலும் ஆகப் பதினொன்றுவதுமுதல் இறப்பதாக இறைகட்டப்பெறவேணு மென்று ஐயன்மழவராயன் நமக்குச்சொன்னமையில் இத்திருக்கோ ளூரும் பூரங்குறிச்சியும் முன்பு ஒட்டுக்கடமையாக இறுத்துப்போ துகையாலே குடியிலி பாழாய்க்கிடக்கையால் இவ்வூர்கள் நான்கெல் லைக்குள்பட்டநிலத்தில் பழந்தேவதானப்பள்ளிச்சந்தம்நீக்கி நீக்கி உள்ளநிலம் (12) பதினெட்டடியான வீரபாண்டியன்கோலால் நிலம் அளந்து பயிர்பார்த்து விளைந்தநிலத்துக்குக் கடமையும் அந்தராய மும் உட்படக் காருக்கு மரக்கால் காசுஅறுமாவரையேவரைக்காணியு முதல்வீரபாண்டி (13)யனல் நெல்லு நாற்கலம் இறைப்புஇறைத்து விளைந்தநிலத்துக்கு இவ்வரிசையில் ஒன்றுபாதியும் எள் வரகு தினை சாமிவிளைந்தநிலத்துக்கு மரக்கால் பதினறுமேனிதிரமும் ஒன்றும் பசானத்துக்கு இவ்வரிசை புஞ்சைமர(14)க்கால்திரம் முக்காலும்ஆக இவ்வாண்டுமுதல் இறுப்பதாக இ(றை)கட்டிகுடுக்கவென்று வரியி லார்எழுத்திட்ட உள்வரியும் நம்மோலையும் தரச்சொன்னோம். கைக் கொண்டுசெயவென்று திருவாய்மொழிந்தருளினர். இவை திருமல்லி நாட்டு(15)த் தடங்கண்ணிசிற்றாருடையான்.........யநின்றுடுவான் வீரசோழதேவனை குருகுலத்தரையன் எழுத்து. இவை செவ் விருக்கைநாட்டு சக்கரபாணிநல்லூர்அரையன் விரதமுடிச்சானை பல்லவராயன் எழுத்து.

———:(o):———

சாசனம் VIII.

ஷெசாசநத்தை கோநேரின்மைகொண்டான் ஸ்திரப்படுத்தியது.

(16)திரிபுவனசக்கரவர்த்தி கோநேரின்மைகொண்டான் திரு வழுதிவளநாட்டுத் திருக்கோளூர் பூரன்குறிச்சிஊரார்க்கு தங்களூர் முன்பு ஒட்டுக்கடமையாக இறுத்துப்போதுகையாலே குடியிலி பாழாய்க்கிடக்கையால் இவ்வூர்கள் நான்கெல்லைக்குட்பட்டநிலத்திற் பழந்தேவதானம் பள்ளிச்சந்தநீக்கி நீக்கிஉள்ளநிலம் பதினெட்டடி

யானவீரபாண்டியன்கோலால் நிலம்அளந்து பயிர்பார்த்து விளைந்த நிலத்துக்குக் கடமையும் அந்தராயமும்உட்படக்காருக்கு(18)மரக்காற் காசு அறுமாவரையே அரைக்காணியும் முதல்வீரபாண்டியன் நெல்லு நாற்கலமும், இறைபடஇறைத்துவிளைந்தநிலத்துக்கு இவ்வரிசையி லொன்றுபாதியும் எள் வரகு தினை சாமி விளைந்தநிலத்துக்கு மரக் கால் பதினறு(19)மேனித்தரமும் ஒன்றும்பசானத்துக்கு இவ்வரி சையும்புன்செய்க்கு மரக்கால்திரம் முக்காலும் அகம்பதினேன்றுவது முதல் இறுப்பதாக இறைகட்டப்பெறவேணுமென்று ஐயன்மழவ ராயன் நமக்குச்சொன்னமையில் தங்க(20)ளூர் முன்பு ஒட்டுக்கட மையாக இறுத்துப்போதுகையாலே குடியிலிபாழாய்க்கிடக்கையால் இவ்வூர்கள் நான்கெல்லைக்குட்பட்டநிலத்திற் பழந்தேவதானம் பள் ளிச்சந்தம்நீக்கி நீக்கிஉள்ளநிலம் பதினெட்டடியானவீரபாண்டியன் கோலால் நிலமளந்து பயிர்பார்த்து விளைந்தநிலத்துக்குக் கடமையும் அந்தராயமும்உட்பட காருக்கு மரக்காற் காசு அறுமாவரையே அரைக்காணியும் முதல்வீரபாண்டியனால் நெல்லு நாற்கலமும்,இறை படஇறைத்துவிளைந்தநிலத்துக்கு (22)இவரிசையி லொன்றுபாதியும் எள் வரகு தினை சாமிவிளைந்தநிலத்துக்கு மரக்கால்பதினறுமேனித் திரமும் ஒன்றும்பசானத்துக்கு இவ்வரிசையும் புன்செய்க்கு மரக் கால்திரம் முக்காலும் ஆக இவ்வாண்டுமுதல் இறுப்பதாகவும் இட்(23)டு வரியிலாரெழுத்திட்ட உள்வரியும் நம்கேழ்வியும் தரச் சொன்னேம். இவ்வாண்டுமுதல் இப்படியிலே இறுத்துப்போதுக. இவை அரும்பெறற்கூற்றத்துப் புதுப்பேர்க்குளத்தாழ்வான் ஆண்டபி ரான் அழகனை அழகியபாண்டியவிழுப்பரை(24)யன் எழுத்து. யாண்டுபதினென்றுவது நாள்எழுபத்துநாலு இவை ஆண்டனட்டு பெருமணலூர்அரையன் முடிவழங்கும்பெருமாளான விக்கிரமபாண் டிய உத்தரமந்திரி எழுத்து. இவை செவ்விருக்கைநாட்டு சக்கர பாணிநல்லூர் அரையன் விரதமுடிச்சானை ப(25)ல்லவராயன் எழுத்து.

குறிப்பு:-'மாக்கால்' என்பது மரத்தாலென்றுவாசிக்கும்படியுமிருக் கிறது. பல்லவராயன் ஒருவன், சுந்தரபாண்டியன்சாசனத்திலும் இந்தச்சாசனத்திலும் கையெழுத்திட்டிருப்பதால், கோநேரின்மை கொண்டான், சுந்தரபாண்டியன்காலத்தானென்று தெரிகிறது. எம் மண்டலமுங்கொண்டருளிய ஸ்ரீகுலசேகரதேவர்காலத்திலும் இருந் திருக்கிறர். (ஆழ்வார்திருநகரிச்சாசனம் IV) இதுபோன்று ஆ. சா. Iம், Vம் இவனுற்புதுப்பிக்கப்பட்டிருத்தல்காண்க. இவனைப்பற்றிச் சிவல்துரை யெழுதியிருக்கும் குறிப்பையும் நோக்குக. கோநே ரின்மை=சமானமரன அரசரின்மையைக்—கொண்டான்.

(தொடரும்.)

A. M. சடகோபராமாநுஜாசாரியன்.

திருப்புகலூர்ச்சாசனங்கள்.

சாசனம் I.

உள்மதில் வடபுறம்.

(1) ஸ்வஸ்திஸ்ரீ சக்ரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோளதேவர்க்கு[1] யாண்டு ங்கூவது மிதுநநாயிற்று பூர்வபக்ஷத்து அத்தத்திநாள் குலோத்துங்கசோழவளநாட்

(2) பனையூர்நாட்டு[2] ஸ்ரீ ஹிருதயத்து தேவலோகம்........ மஹாஸபையோம் இறையிலிநிலம் விலையாவணம் - உடையார் ஸ்ரீ புகலூ

(3) ர்தேவர் ஸந்நிதியிலே? சுவிஸ்துசெய்தருளும்போது உத்த மாநாடும்...லோகமாணிக்கவுத்தரவேதிமங்கலத்து வரகூர்நம்பி யார்குளத்திற் தெக்கரையி

(4) லே நித்தம் பன்னிரண்டுப்ராஹ்மணர் உண்பதாக ஜெயங்கொண்டசோழமண்டலத்து[3]ப் புலியூர்கோட்டத்துப் பேரூர்நாட்டு[4] நெற்குன்றத்து நெற்குன்றங்கி

(5) ழான் அற்புதக்கருவுணயகரான களப்பாளராஜர்செய்வித்த சாஸநத்துக்கோயிலிற் திருவாலவாயுடையார் ஸ்வாமிதேவற்கு இதேவர் ஸ்ரீ பண்டாரத்தேவஸமுகொண்டு

(6) இச்சாஸநப்படியாக நாங்கள் இறையிலியாகவிற்றுக்கொடுத்தநிலமாவது பார........டன்ஊர் நத்தத்தான் நாற்பத்தெண்ணுயிரப்பொற்கோயில்நம்பி

---

1 குலோத்துங்கன் I, 1070—1118.

2 இது, திருப்புகலூருக்கு 3-மைல் தென்மேற்காயுள்ள பாடல்பெற்ற சிவஸ்தலம்.

3 தொண்டைமண்டலம்.

4 தொண்டைமண்டலம் 24 கோட்டங்களாகவும் அக்கோட்டங்கள் 79 நாடுகளாகவும் பகுக்கப்பட்டிருந்தன. கோட்டங்கள்வருமாறு:—புழல், புலியூர், ஈக்காடு, மணவூர், செங்காடு, பையூர், எயில், தாமல், ஊத்துக்காடு, களத்தூர், செம்பூர், ஆமூர், ஈத்தூர், வெண்குன்றம், பல்குன்றம், இளங்காடு, கலியூர், சிறுகரை, படுவூர், கடிகை, செந்திருகை, குன்றப்பட்டினம், வேங்கடம், வேலூர், புலியூர்க்கோட்டத்தில் குன்றத்தூர், போரூர், மாங்காடு, அமரூர், கோட்டூர் என்றநாடுகள் அடங்கின.

(7) இவ்வூரில் பெலகுடிமக்கள்பக்கல் விலைகொண்டுடையனாய் அனுபவித்துவாராநிற்ப அவர்பக்கல் நம்பிராட்டியார் புவனிமுழுதுடையார்5விலை

(8) கொண்டுடையராய் அனுபவித்துவாராநின்று திருவையாறுடைய மஹாதேவர்கோயிலிலே பெருமாளொடுங்கூட எழுந்தருளியிருந்து எங்களுக்கு ஸ்ரீ சனத்த

(9) மாக நீர்வார்த்துத்தந்து நாங்களும் நாற்பதுஸம்வத்ஸரத்தில் உடுஜெபம் ஸகிஜ(?)ப்பொதுவாய் அனுபவித்துவருகிறநிலத்துக் கருணாகரவதிக்குக்கிழக்கு லக்ஷ்மண

(10) வாய்க்காலுக்குத் தெற்கு முதலுங்கண்ணாற்று ரெண்டாஞ்சதிரத்துவடக்கடை டுரு ....ஹாமதிட்டப்படி ருஅடி அருமொழிதேவவதிக்குக்கிழக்கு லக்ஷ்மண

(11) வாய்க்காலுக்குத்தெற்கு முதலுங்கண்ணாற்று ரெண்டாஞ்சதிரத்து

(12) நீத்துவஙகிருநால்விரித்துருஉ......நாறேமுக்காலே அரைமா அரைக்காணிமுந்திரிகைக்கீழரையும் காணியாக விலைக்கீழ்முதலுக்கு நம்பிஸிசைத்த

(13) விலைப்பொருளற்றுனறக்காசுயம் இச்சாலை உண்கைக்கு சூத்ரகாரம் ப்ராஹ்மணர் பன்னிருவர் உண்கைக்கு இறையிலிசெய்துகொடுத்துக்கொண்டு நம்பிலி

(14) சைத்தகாசு கூடும் அந்தக்காசு ரம் ஸ்ரீபண்டாரத்தேகொண்டு இத்தில்

(15) இருக்க......ஆதாரம் இறையிலியாகவும் இப்படிக்கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொளப்பெறுவதாகவும் இந்நிலம் இறையிலியாகவிற்றுக்கொடுத்தோம்6

(16) இறையிலிநிலம் விலையாவணம்செய்துகொடுத்தோம் இதுதேவ......தெவற்கு மாணிக்கஞ்சுதந்திரம்வெட்டிமாமைத்து மஹாபாதகரே யேம் இயமேட்டித்துக்கு அழிவுசெய்தார் பஞ்சமஹாபாதக(ர்)கள்

---

5 புவனிமுழுதுடையார் குலோத்துங்கனதுபட்டமஹிஷியென்பர் சோழவம்சசரித்திரமுடையார்.

6 இந்நிலத்திற்கு இன்றும் நெற்குன்றமென்று பெயர்வழங்கப்படுகிறது. வெகுநாள்வரையில் தேவஸ்தானம்வசமிருந்ததென்பது பின்வரும்சாஸனத்தால் வெளியாகின்றதாயினும், யாதுகாரணத்தாலோ இப்பொழுது பராதீனப்பட்டிருக்கின்றது.

சாசனம் II.

வெளிமதில் உட்புறம் கோபுரவாசல் மேல்புறம்.

(1) ஸ்வஸ்திஸ்ரீ ஸாலிவாஹனஸகாப்தம் கசுளஎ௰க1
(2) கஸ்யாப்தம் சதஅாடு௰க இதன்மேல் செலாநின்
(3) ற பிரசோற்பதிஇ செங்கல்மதிள்இடி-
(4) ச்சு கல்மதிள்கட்டையில் இந்தகிராமங்கள்
(5) நிலப்பேர்வழி வாதாவிப்பிள்ளையார்கோவில்ம
(6) தினில் குலோத்துங்கசோழன்னுளையில்நடந்ததை
(7) கண்டுகொள்ள
(8) திருப்புகலூர் கட்டளைகிராமம் பேர்வழி
(9) உள்ளூர், கருந்தார்குழலி, தோட்டக்குடி,
(10) வயலூர், யெல்லாக்கிநாச்சி, வன்னத்தாமனச்சி
(11) யி, புகலூர்மனச்செயி, கீழத்தாங்கல்உள்பட்
(12) ரையாள், பாறநல்லூர், நகரி, கடவனபிள்ளையாரு
(13) ம், தேப்பெருமாமங்கலம், சவரிராசன்கட்டளை
(14) மாதிரிமங்கலம் ஊக்கிடை, கயத்தூர் ஊ(உ?)க்கிடை
(15) கருப்பூர் ஊக்கிடை, ஆமைப்பட்டம், பறக்குடி,
(16) தோசைக்கட்டளைஉள்பட சரண்யபுரம்,
(17) நெற்குளம், சகடமங்கலம், ராமன்ந
(18) தீசுவரம் ராமனுதசுவாமிகிறுமம்2

---

1 கி. பி. 1751. (இங்கிலிஷ்) இந்நிலங்கள் தெரிந்தமட்டில் கி. பி. 1089 முதல் 1751வரையில், அதாவது 662-வருடங்களாகத் தேவஸ்தானநிலங்களாகஇருந்தது நிதர்சனம். பிறகு சில பராதீனப்பட்டகாரணம்புலப்படவில்லை.

2 ஸ்ரீராமபிரானுல் பூஜிக்கப்பட்டஸ்தலம். திருக்கண்ணபுரம் என்னும் திவ்யஸ்தலத்திற்கு ஒருபர்லாங்குதூரத்திலுள்ளது.

சாசனம்—III.

பிரகாரம் தென்புறம்.

(1) ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனசக்கிரவ(ர்)த்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டுருவது கன்னிநாயிற்று பூ(ர்வ)பக்ஷத்து பஞ்சமியும் திங்கட்கிழமையும்பெற்ற விசாகத்துநாள் (ராஜே)ந்திரசோழவள நாட்டு கழையி..........பெருமங்கலத்து மடைக்கமைத்த வார்யப் பெருமக்களில் மாகரைத் திருவெண்காடுபட்டனும், இடையாற்றுக் குடி சந்திரசேகரபட்டனும், குண்டூர் திருவெணுமலைபட்டனும் குஞ் சப்பவலைஞுற்பட்ட

(2) னும் வெணைவோமதில் விலை ஆவணம் - குலோத்துங்க சோழவளநாட்டு பனையூர்நாட்டு ஸ்ரீபுகலூர்தேவர்கோவில் உடையார் ஞுருமங்கலாகார்யர் எழுந்தருளிவித்த ருஷ(ப)வாகனதேவர் ஞுரு விடங்கர் திரிபுவனராண்டே ஸ்ரீதேவர்கன்மிகளுக்கு நாங்கள் விலைக் குக்கொடுத்தநிலமாவது. ஆரப்விடாகை மீனவநல்லூரில் பெருங் கோவாய்க்காலுக்குவடக்கு முதல்கண்டத்து பட்டர்குளம்நஞ்சைக்கு ....கிழக்குடையநஞ்சைக்குதெற்கு

(3) ....கொல்லையும் பொதுவாக நீங்கினநிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லையைப் பொதுவாகநீங்கின நிலத்துக்கு வடக்கும் மேல்பாற்கெல்லையுள்ள

(4) மங்கலத்து நித்தானந்தபட்டனும் இடையாற்றி(க்குடியி) லிருக்கும் ஆரியன் பூவக்கபட்டனும் நிலத்துக்குக்கிழக்கும் வடபாற் கெல்லை கண்ணுற்றுவாய்க்காலுக்குதெற்கும்ஆக இசைந்த பெரு நான்கெல்லையுள் நடுவிடம்......விருந்நிலம் வேலியும் விற்றுக்கொடுத் தோம். தேவர்கன்மிகளுக்குவேண்டிய பெருமக்களோம் விற்றுக் கொடுத்துக்கொள்வதான எம்மிலிசைந்தவிப்பேர்கள் அன்றாடு நெற் காசுசம இக்காசுநாற்பதும்;

(5) கொண்டபரிசாவது, இந்நாயனூற்கு சந்திராதித்தவரை செங்கழுநீர்த்திருப்பள்ளித்தாம(ஞ்)சாத்துகைக்கு செங்கழுநீர்க் குளம் கொள்ள உடையார் ஞுருமங்கலாகார்யர் இத்தேவர்க்கு

கொடுத்திருக்கிறது. இந்தக்காசுசம் இக்காசுநாற்பதும் இத்தேவர் க(ன்)மிகள்பக்கலே ஆவணக்களரியே யக்காட்டேகரிகை. செல வறக்கொண்டு விலைப்பிரமாணஞ்செய்துகொடுத்தோம் இத்தேவர் கன்மிகளுக்கு

(6) ஸபைக்குச்சமைந்த இவ்வாரியப்பெருமக்களோம். இக் குளநிலத்து குடுத்ததுவே விலை.ஆவதாகவும் இதுவே விலைஆவண மாவதாகவும் ....இதுவல்லது வேறுபொருள் மாவறுதிப் பொருள் செலவோலைகாட்டி கடந்தில்லாததாகவும். இப்படி விலைக் கறவிற்றுப் பொருளறக்கொண்டு விற்று விலைப்பிரமாணஞ்செய்து

(7) (6-வது வரியே திரும்ப எழுதப்பட்டிருக்கிறது)

(8) கொடுத்தோம் இத்தேவர்கன்மிகளுக்கு ஸபைக்குச் சமைந்த வாரியப்பெருமக்கள் மாகரைபதி திருவெண்காடுபட்டனும், இடையாற்றுக்குடி சந்திரசேகரபட்டனும், குண்டூர் திருவெண்ணமலை பட்டனும், குஞ்சப்பவலைஞாற்பட்ட னும், இவ்வனவோம்பேர்கள் பணிக்கு இந்தஸபைப்பிரமாணமாயெழுதினேன் இவ்வூர் கடிகாமைத்தி யத்தனலங்

(9) காரப்பிரியன்கீழ்க்கணக்கு இவ்வூர் கடிகாலமத்தியத்தன் ஏறுசேவகன் மணிவண்ணனுன சாதுப்பிரியன் எழுத்தென்றும், இப் படிக்கு இவை மாகரைத் திருவெண்காடுபட்டன் எழுத்தென்றும்...

குறிப்பு:—இதிற்கண்ட செங்கழுநீர்த்திருப்பள்ளித்தாமஞ்சாத்துகைக்காக ஏற்பட்டகுளம் இன்றும் சந்நிதிக்குத் தென்கிழக்கிலிருக்கிறது. அதனை யாது காரணத்தாலோ தூர்த்துவருகின்றனர்.

இலக்கணவிளக்கபரம்பரை,

திருவாரூர்-சோமசுந்தரதேசிகன்.